Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு
20 % விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு
1 Kg க்கான கட்டணம் 500/=
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
திருமுருகன் கொம் நெற்
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம்,
பிரதான வீதி; நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம்
166,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 13 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 21 (29.07.2005) வெள்ளிக்கிழமை இதழ்:302

## வவுனியா பிரகடனம் தேசியத் தலைவருக்கு!

### கிளிநொச்சியில் வைத்து கையளிப்பு



கிளிநொச்சி—

வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா பிரகடனத்தை தமிழீழத் தேசியத் தலைவரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியாவில் வெளியிடப்பட்டது.

நேற்றுக்காலை வவுனியா நகரில் அணிதிரண்ட தமிழ்த் தேசிய பேராளர் கள் - கிளிநொச்சிக்கு அணியாகச் சென்று தமிழீழ அரசியற்துறை நடுவப் பணியகத்தில் வைத்து வவுனியா தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை தமிழீழத் தேசியத் தலைவரிடம் கையளிப்பதற்காக அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் கையளித்தனர்.

## தேசியத் தலைவரின் கரங்களை பலப்படுத்த உறுதியாக உழைப்போம்!

### திருமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் விக்கினேஸ்வரன்

கிளிநொச்சி —

எமது நிலத்தில் - எமது பலத்தில் - எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும். அந்த உன்னதமான உயரிய சுதந்திரவாழ்வை நோக்கி தமிழ்மக்களை அணிதிரட்டி வருகிறோம் என திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் ச.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ தேசியத் தலைவருக்கு தமிழீழ தேசிய எழுச்சி மாநாட்டில் எடுக்கப் பட்ட தீர்மானத்தைக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழ்மக்கள் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள அரச தலைமைகளால் (12 ஆம் பக்கம் பார்க்க)



# வட - கிழக்குக்கான நிவாரண உதவிகளை அமெரிக்கா நேரடியாக வழங்கவேண்டும்!

## வொஷிங்ரன் மாநாட்டில் கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

வொஷிங்ரன்—

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கான நிவாரணங்களை நேரடியாக அனுப்பிவைப்பதற்குரிய சட்டரீதியான இடையூறுகளை நீக்கும்படி அமெரிக்க அரசாங்கத்திடம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்க தலைநகர் வொஷிங்ரனில் காங்கிரஸின் மனித உரிமை அமைப்பால் சுனாமி நிவாரணங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

கடந்த மூன்று வருடங்களாக முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. தென்பகுதியில் பெரும் பான்மையாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## போரைத் தொடங்கக் கோரி பூநகரியில் நேற்று பேரணி!

கிளிநொச்சி—



## ஈ.பி.டி.பி. உறுப்பினர் நிக்சன் யாழ்.நகரில் சுட்டுக் கொலை!

# போரைத் தொடங்கக் கோரி பூநகரியில் நேற்று பேரணி!

கிளிநொச்சி

தமிழீழத் தேசியத் தலைவரை போரைத் தொடங்குமாறு கோரி பூநகரி பிரதேச மக்களால் பெரும் பேரணி ஒன்று நேற்று நண்பகல் நடத்தப்பட்டது.

பூநகரி மகாவித்தியாலய முன்பிருந்தும் பூநகரி பிரதேச செயலக முன்றலில் இருந்தும் இரு முனைகளில் ஆரம்பமான பேரணிகள் பூநகரி வாவியடியில் நிறைவடைந்தன. அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் இலங்கை அரசுக்கான கண்டன உரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு பூநகரி மகாவித்தியாலய அதிபர் பொன். தியாகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பேரணியின் முடிவில் தமிழீழத் தேசியத் தலைவருக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் மனுக்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பேரணியில் -

பொறுமையால் வருவது சிறுமை.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# ஈ.பி.டி.பி. உறுப்பினர் நிக்சன் யாழ்.நகரில் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம்

யாழ்.நகரப் பகுதியில் தினமுரசு பத்திரிகை விநியோகித்துக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் - மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் நேற்றுப் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியள வில் ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுழியாம்பிள்ளை நிக்சன் (வயது 23) என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் மேற்படி நபர் தனது சகா ஒருவருடன் தினமுரசு பத்திரிகையை விற்பனை (12 ஆம் பக்கம் பார்க்க)



# கோதுமை மாவில் இரசாயனம்; விற்பனையை நிறுத்த உத்தரவு!

கொழும்பு

பிரதான நிறுவனம் ஒன்றின் கோதுமை மாவின் விற்பனையை உடன் நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த பிரதான நிறுவனத்தின் ஒரு கிலோக்கிராம் கோதுமை மாவில் இரசாயன கலவை கலந்திருப்பதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைத்திருந்தது.

இதன் அடிப்படையில் நிறுவனத்தின் களஞ்சியத்திலும் நிறுவனத்தால் வியாபார தலங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த ஒரு கிலோ பொதியிலான கோதுமை மாவும் கைப்பற்றப்பட்டு அரசாங்க இரசாயன பகுப்பாய்வுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் படையினருக்கு இந்தியா தொடர்ந்து உதவிகள் வழங்குகிறது!

## அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

புதுடெல்கி

இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு இதுவரை செய்துகொள்ளப்படாவிடினும் -இரு தரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்திய இராணுவப் பயிற்சி நிறுவனங்களில் இலங்கைப் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

இந்திய ராஜ்யசபாவில் சபாநாயகர் பேராசிரியர் ஆர்.பி.எஸ். வர்மாவுக்கு எழுத்து மூலம் வழங்கிய பதிலிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் தனது எழுத்துமூல பதிலில் -

இலங்கையுடன் இந்தியப் பாதுகாப் புத்துறை ஒத்துழைப்பு மேற்கொள்வது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க இலங்கை அரசு யோசனை தெரிவித்தது.

இதுகுறித்து இந்தியா ஆராய்ந்து வருகிறது. ஆனால் இறுதி முடிவு எதுவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் கைக்குண்டு வீச்சு!

வவுனியா

வவுனியா - திருநாவற்குளத்திலுள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவை அலுவலகம் மீது நேற்றிரவு 9 மணியளவில் இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டன.

இந்தக் கைக்குண்டுகள் வீசப்பட்டு வெடித்த போதிலும் எவருக்கும் காயமேற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகி றது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டதாகத் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (03)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி மாணவனைக் காணவில்லை!

யாழ்ப்பாணம்

மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி மாணவனைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட மாணவனான நவக்கிரி புத்தூர் கிழக்கைச் சேர்ந்த குணரட்ணம் ராஜதீபன் (வயது 25) என்பவரையே காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இவரது சகோதரரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி கொண்டாட்டம் ஒன்றுக்காக இவர் யாழ்ப்பாணம் வந்ததாகவும் பின்பு கடந்த 18 ஆம் திகதி மட்டக்களப்புக்குச் சென்ற இவர் அங்கு வந்து சேரவில்லையென முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தரமற்ற உணவுப் பொருட்கள் விற்றவர்களுக்கு அபராதம்!

யாழ்ப்பாணம்

கோண்டாவில் மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு தயாரித்து களஞ்சியப்படுத்தியமை, காலாவதியான உணவுகளை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக ஐவருக்கு யாழ். நீதிமன்றத்தால் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோண்டாவில் மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர் பரிசோதனையின் போது காலாவதியானதும், தரம் குறைந்ததுமான உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டு 5 பேருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்தவாரம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிராளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து யாழ். நீதிமன்ற நீதிவான் தலா ரூபா 5 ஆயிரம் வீதம் ஐந்து பேருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

# எழுதுவினைஞர் பரீட்சைக்கான வகுப்புகள்!

யாழ்ப்பாணம்

எழுதுவினைஞர் தரம் II அ பதவியுயர்வுப் பரீட்சை ஓகஸ்ட் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான வகுப்புக்கள் கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தால் நடத்தப்பட்டது.

பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் நாளையும், நாளை மறுதினமும் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் எனவும், ஏற்கனவே வகுப்புக்களில் பங்கு பற்றியவர்கள் அன்றைய தினம் சமுகம் தருமாறு உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

# கரையோர மணல் அகழ்வு; நெடுந்தீவில் தடை விதிப்பு!

நெடுந்தீவு

நெடுந்தீவுப் பிரதேசத்திலுள்ள மக்கள் தமது தேவைகளுக்கு கடற்கரையோரங்களில் மணல் அகழ்வது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரால் கடந்த வாரம் முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு தெற்கு, மேற்கு கடற்கரையோரங்களில் மணல் அகழ்வதற்கான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டபோதும், பலர் அனுமதிக்காத பகுதிகளிலும் மற்றும் தெற்கு கடற்கரை வீதியை ஊடறுத்தும் மணல் அகழும் செயற்பாட்டில் ஈடுபடுவதனாலேயே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக நெடுந்தீவிலுள்ள மணல் ஏற்றும் உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


(113)

# இன்று பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரச பணிநிலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று இன்று காலை 9 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் மேற்படி நிறுவகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆலோசகர் பேராசிரியர் பி.நந்தகுமார், நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர் எஸ்.எம்.றைஸ், செயலாளர் எஸ்.கிருஸ்ணானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



வேலணைக் கடற்கரையில் நேற்று முன்தினம் கரை யொதுங்கிய சுமார் 50 அடி நீளமுடைய இராட்சத கடல் விலங்கின் எலும்புக்கூட்டின் தோற்றம்.


## சிறு விளம்பரம்

### தேவை

வெளிநாட்டு கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் கல்வி நிறுவனத்தில் (Computer அறிவு சுமாராகவும், ஆங்கிலத்தில் சுமாராகவும் பேசக்கூடிய ஆண்/ பெண்) இருபாலரும் தேவைப்படுகிறார்கள். சுய விபரங்களுடன் விண்ணப்பங்களை மின் அஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பி வைக்கவும். Email :- russianadmissions@gmail.com

(C/4319)

### [illegible]ளர்கள் தேவை

யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் இயங்கும் வர்த்தக நிறுவனங்களுக்கு பலதரப்பட்ட பணியாளர்கள் இருபாலாரும் தேவை. பணிபுரிய விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பவும்:- விளம்பர இலக்கம் - 40, நமது ஈழநாடு, இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்



பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

ரஜினி, பிரபு, ஜோதிகா, நயந்தாரா மற்றும் பலர் நடித்த

சந்திரமுகி

பஸ் போக்குவரத்துபாதை

இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

மகத்தான மூன்றாவது வெற்றி வாரம்

அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த



சின்னா

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

மாதவன், சதா மற்றும் பலர் நடித்த

பிரியசகி



காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

சந்திரமுகியின் வெற்றியை அடுத்து... இன்று முதல்

ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

தாஸ்

காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

2008 இல் சட்டத்தரணியாக வேண்டுமா?

உடன் பதிவுசெய்யவும்.

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டது.

ஞாயிறு – 1.30 பி.ப

கட்டணம் :

பதிவுக் கட்டணம் – 450/-

மாதாந்த கட்டணம் – 950/-

மாணவர்களுக்கு அடிப்படை சட்ட, அரசியல் அறிவு சம்பந்தமாக கையேடுகள் வகுப்பில் வழங்கப்படும்.



HARVARD GLOBAL CENTRE

NO. 711, K.K.S Road, Jaffna.

[C/4321] T.P : 021 - 222 6188

நமது ஈழநாடு நடாத்தும்

ஆண்டு 5 மாணவர்களுக்கான

இலவச முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில்

இடம் : வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை

காலம் : 30.07.2005 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் 3.00 மணிவரை

கிளிநொச்சி மாவட்டத்தில்

இடம் : கிளி.மத்திய கல்லூரி பரந்தன் இந்து மகாவித்தியாலயம்

காலம் : 31.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 3.00 மணிவரை

விண்ணப்பம் அனுப்பிய, அனுப்பாத மாணவர்களும் பங்கு பற்றலாம்.

அனுசரணையாளர்கள்:

கொமர்ஷல் வங்கி – உங்கள் நலமே எங்கள் நோக்கம்

சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது செலிங்கோ – சுன்னாகக் கிளை

DSI – சுப்ப சூஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

BOC – ரண் கெகுழு சிறுவர் சேமிப்புக் கணக்கு

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்

மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

குமரகுரு

புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்.சாலை, கிளிநொச்சி. Tel : 021 - 228 5971

# அதிக உழைப்பாலும், தேசப்பற்றாலும் தமிழ்மக்கள் ஒன்றுசேர்ந்திருக்கின்றனர்!



## புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன்

வவுனியா—

தமிழ் மக்கள் எப்போது சுய நிர்ணய உரிமைகளைப் பெற்றுக் கொள்கிறார்களோ, அப்போது தான் சிங்கள மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பார்களென, விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் சிறப்புரையாற்றிய பாலகுமாரன் மேலும் தெரிவித்ததாவது -

எமது தமிழ்த் தேசம் நிச்சயமாக விடிவுபெறும். தமிழ் மக்கள் பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டார்கள். புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்பதை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது. அதீத உழைப்பாலும், தேசப்பற்றாலும் தமிழ் மக்கள் இன்று ஒன்று சேர்ந்திருக்கின்றார்கள்.

இறைமை, தன்னாதிக்கம் என்ற எங்களது வாசகங்களை இலங்கையின் சுதந்திரத்துக்காக நாங்கள் 1948 இல் சொல்லிக் கொடுத்ததை, இன்று சிங்களவர்கள் எங்களுக்குக் கூறுகிறார்கள் என்று, 1976 இல் தந்தை செல்வா சொன்னார். தமிழர்களின் முயற்சியால் இலங்கையின் இறைமை அன்று மாறியது. ஆனால், அந்த உரிமையை சிங்களவர் எங்களுக்குத் தர மறுத்துவிட்டார்கள்.

அன்று பல தமிழ்த் தலைவர்கள் சொன்னார்கள் எந்தவொரு தமிழனும் இனிமேல் சிங்களவர்களை நம்பமுடியாது என்று. தந்தை செல்வா சொன்னார் அன்று மலையக மக்களுக்கு நடந்தது, இன்று எங்களுக்கும் நடக்கும் என்று. முஸ்லிம் மக்களைப் பார்த்து தந்தை செல்வா உங்களுக்கு வாழ்வுரிமை இருக்கிறது. நாங்கள் ஒன்று சேருவோம் என்று சொன்னார்.

ஆனால், இன்று முஸ்லிம்கள் பேரினவாத சக்திகளின் சதித் திட்டத்துக்கு இரையாகின்றனர். இந்தநிலை மாறவேண்டும். தமிழ் மக்கள் என்று சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்கின்றார்களோ, அன்றுதான் சிங்கள மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பார்கள். எமக்குச் சுதந்திரம் கிடைத்ததும் சிங்கள மக்களை நாங்கள் ஆதரிப்போம், அரவணைப்போம், சிங்கள மக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வோம்.

எப்படியாவது ஒரு தீர்வை தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்போம் என்று சிங்களத் தலைவர்கள் கூறுவார்கள். பண்டா சொன்னார், டட்லி சொன்னார். ஆனால், எதுவும் நடக்கவில்லை. சமஷ்டியைப் பற்றி சிங்களத் தலைவர்கள் பேசுவார்கள். பின்னர் அவர்களே மறுப்பார்கள் என பாலகுமாரன் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# தமிழரின் கட்டடங்கள்மீது குண்டுபோட்டால் தென்னிலங்கைக் கட்டடங்களும் தகரும்!

## செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை

வவுனியா—


அடுத்தகட்ட ஈழப்போரில் தமிழர்களின் கட்டடங்கள் மேல் குண்டுபோட்டு தகர்த்தால், அதே நேரம் தென்னிலங்கையில் உள்ள கட்டடங்களும் தகரும். அந்தளவுக்கு இப்போது தமிழர்கள் பலமாக இருக்கின்றார்கள் என - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம், வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் -

வட்டுக்கோட்டையில் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாடு வரலாற்றில் பெற்ற முக்கியத்துவத்தைவிட - இந்த வவுனியா மாநாடு வரலாற்று முக்கியத்துவம் பெறப்போகிறது. தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலோடு தமிழர்கள் மிகவும் பலமான நிலையில் நடத்தும் மாநாடு இது.

இந்த மாநாடு எடுக்கும் முக்கியமான தீர்மானங்கள் எங்கள் விடுதலைப் போராட்டத்தை முக்கியமான கட்டத்துக்குக் கொண்டு செல்லும் எனத் தெரிவித்தார்.



# புலிகள் நடத்தும் போராட்டத்தால்தான் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றனர்!

## எழுச்சி மாநாட்டில் மனோ கணேசன்

வவுனியா—

தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டுமென அன்று தந்தை செல்வா கூறினார். அந்தக் கடவுள் வேறு யாருமல்ல. தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன்தான் என, மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் தெரிவித்தார்.


அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழர்களுக்கு எதுவுமே வழங்கக்கூடாது என்பதில் சிங்களப் பேரினவாதம் கவனமாகவே இருக்கிறது. பொதுக்கட்டமைப்பு என்பது பொய்க் கட்டமைப்பாக மாறிவிட்டது. சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளைக்கூட வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது.

முற்றுமுழுதாக சிங்களவர்களைக்கொண்ட இராணுவம் தான் இந்த நாட்டிலுள்ளது. இதனால்தான் புலிகளின் படை தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது. புலிகளின் போராட்டத்தால்தான் நாடு முழுவதிலுமுள்ள தமிழர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள். இதனை யாரும் மறுக்கமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழீழம்தான் இறுதித் தீர்வு என்ற கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளோம்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



வவுனியா—

தமிழீழம்தான் இறுதித்தீர்வு என்ற தீர்மானத்துக்கு நாங்கள் கட்டாயமாகத் தள்ளப்பட்டு விட்டோம். இந்த சிங்கள தேசம் எதுவும் தராது. இடைக்கால நிர்வாகம் கேட்டோம் எதுவும் இல்லை. தமிழீழத்தை புலிகள் கேட்கவில்லை. தமிழ் மக்கள்தான் கேட்டார்கள். இவ்வாறு நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது: -

தந்தை செல்வா அன்று தமிழீழப் பிரகடனத்தைச் செய்துவிட்டு மேடையில் இருந்து கீழே இறங்கி வந்து என்னிடம் சொன்னார். தம்பி என்னால் எதுவும் செய்ய முடியாது, எனக்கு வேறு வழி தெரியவில்லை.

அதனால்தான் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தினேன். தமிழ் மக்களுக்கு, தமிழ்த்தேசியத்துக்கு நல்லதொரு தீர்வை வழங்கக்கூடிய நல்ல சிங்களத் தலைவனைக் காணவில்லை என்று அவர் கூறினார்.

இதன் பின்னர்தான் அந்தக் குறிக்கோளை, அந்த இலட்சியத்தை, உறுதியோடு முன்னெடுக்க ஆரம்பித்தார்கள். சர்வதேச சமுகத்துக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன். சிங்களத் தலைமைகள் ஒன்றிணைந்து, ஒற்றுமையாக ஒரு தீர்வைத் தர முன்வரவில்லையானால், தமிழீழம் என்ற எமது இலட்சியத்துக்கு ஆதரவு தரவேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கேட்டதைத்தான், பிரகடனப்படுத்தியதைத்தான் நாங்கள் இன்றும் கேட்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




ஊடக நிறுவனங்களுக்கு பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா அச்சுறுத்தல் விடுத்தமையைக் கண்டித்து, நேற்றுமுன்தினம் புறக்கோட்டையில் ஊடகவியலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் ஒரு காட்சி

# தமிழர்களின் உரிமைகளை சர்வதேசம் மீட்டுத்தர வேண்டும்

## மன்னார் ஆயர் ஜோசப் ஆண்டகை தெரிவிப்பு

வவுனியா—

தமிழர்களின் உரிமையை சர்வதேச சமூகம் மீட்டுத்தர வேண்டும் அல்லது போரின் மூலம் அந்த உரிமைகளை நாமே வென்றெடுப்போம் என்று, மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை எச்சரிக்கை விடுத்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ் பேசும் மக்களின் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் -

அரசு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட உரிமை மறுப்பின் விளைவாகத் தங்களுடைய வாழ்வுக்காக ஆயுதப் போராட்டத்தை தவிர்க்க முடியாமலேயே தமிழர்கள் தெரிவு செய்தனர்.

இத்தகைய நிலையில் - அரசு தமிழ் மக்கள் மீது மிலேச்சத்தனமான போரைக் கட்டவிழ்த்து விட்டது.

1999 ஆம் ஆண்டு மடுத் திருப்பதியில் இடம்பெயர்ந்த மக்கள் - பெருமளவில் தஞ்சம் புகுந்திருந்தபோது, இராணுவம் அதை ஆக்கிரமித்தது.

மடுத்திருப்பதி நிலைமையை ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தெரிவித்து, அதன்மீது படையெடுப்புச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொண்டோம். அவ்வாறு படையெடுப்புச்செய்ய மாட்டோம் என்று கடைசிவரை வாக்களித்து விட்டு, அதற்கு மாறாக படையெடுப்புச் செய்து, மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

போராளிகள் ஆயுதங்களுடன் நின்றிருந்தபோதும், மக்களைக் காப்பதற்காகப் படையினருக்கு எதிராகத் தாக்குதல் எதுவும் நடத்தாமல் நகர்ந்தனர். ஆனால், படைகள் மக்களைக் கொன்றொழித்த காரணத்தால், அந்தப் படையினர் போராளிகள் ஓட ஓட விரட்டியடித்தனர்.

மூன்று ஆண்டுகளின் முன்னர் சர்வதேச சமூகத்தை நம்பியே இந்த அமைதி நிலைக்குத் தமிழ் மக்கள் வந்தனர். அரசை நம்பியல்ல.

இன்று தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில், சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டும். அல்லாதுவிடில் போராட்டம் மூலம் தமது உரிமைகளைத் தாமே அமைத்துக் கொள்ள வேண்டிவரும் எனத் தெரிவித்தார்.

# போதைப்பொருள் கடத்திய முன்னாள் விமானப்படை கோப்ரலுக்கு நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதிப்பு!

கொழும்பு—

ஹெரோயின் கடத்திவந்த முன்னாள் விமானப்படை கோப்ரலுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்த சம்பவம் தொடர்பாக - விமான சேவைகள் நிறுவனமொன்றில் பாதுகாப்பு அதிகாரியாக சேவையாற்றிவந்த விமானப்படை கோப்ரல் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு ஏத்துக்கலவைச் சேர்ந்த அவருக்கு இந்த வழக்கில் நீர்கொழும்பு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுள்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு 2493.5 கிராம் ஹெரோயின் கொண்டுவந்தது, அதைத் தன்னிடம் வைத்திருந்தது ஆகிய குற்றங்களுக்காக அவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி பயணப்பொதியினுள் மறைத்து இலங்கைக்கு 6கிலோ 200 கிராம் போதைப் பொருளை கொண்டுவந்த போது -

கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டார். இந்தப் போதைப்பொருட்களினுள் 2493.5 கிராம் சுத்தமான ஹெரோயின் இருந்ததாகக் கூறப்படுகிறது.

வழக்கு விசாரணைகளின் போது குறித்த சந்தேக நபர் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே தான் சட்டவிரோதமாக பலமுறை தங்கம் கொண்டு வந்திருப்பதாகவும் -

கைதுசெய்யப்படும்வரை தான் தங்கம் என்று கருதியதாகவும் போதைப் பொருட்களைக் கொண்டு வந்தமை தனக்கு தெரியாது என்றும் கூறினார்.

# லக்ஷ்மன், டோனி காயமடைந்ததால் முத்தரப்பு தொடரில் ஆடுவார்களா?

குருநாகல் —

முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் நாளைய ஆட்டத்தில் இந்திய அணி வீரர்கள் லக்ஷ்மன் மற்றும் ஷேவாக் ஆகியோர் விளையாடுவார்களா என சந்தேகம் எழுந்துள்ளது.

இந்திய அணி முதல் பயிற்சி ஆட்டத்தில் விளையாடிய போது லக்ஷ்மனுக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது. இதனால் நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது போட்டியில் அவர் ஆடவில்லை. மேலும் இரண்டு பயிற்சி ஆட்டங்களிலும் அதிரடியாக ஆடிய டோனிக்கு நேற்றுமுன்தினம் காயமேற்பட்டது.

இதனால் அவர்கள் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் ஆடுவார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் கூறியதாவது -

இந்திய வீரர்கள் பயிற்சி ஆட்டங்களில் சிறப்பாகச் செயற்பட்டனர். விக்கெட் காப்பாளர்



டோனி, லக்ஷ்மன் ஆகியோருக்கு காயமேற்பட்டுள்ளது. லக்ஷ்மனுக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. பயிற்சி ஆட்டத்தில் வீரர்கள் நல்ல திறமையை வெளிப்படுத்தினார்கள். அவர்கள் அனைத்து போட்டியிலும் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

இலங்கை, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுக்கும் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்தவர்கள்தான் பயிற்சியாளர்களாக உள்ளோம். இது எங்களுக்கு இடையேயான போட்டி இல்லை. 3 நாடுகள் மோதும் போட்டிதான்.

இலங்கை அணி மிகச் சிறந்த அணி. அந்த அணிக்கு எதிராக இந்திய வீரர்கள் தங்களது திறமையைக் காட்டுவார்களென்று அவர் தெரிவித்தார்.

# மேற்கிந்திய வீரர்களின் பொருட்களை திருடியவர் இராணுவச் சிப்பாய்!

கொழும்பு —

மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்களின் பொருட்களைத் திருடிய இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.


மேற்கிந்தியத் தீவுகள் அணி கடந்த 10ஆம் திகதி கொழும்பில் பயிற்சி ஆட்டமொன்றில் ஈடுபட்டது. அப்போது மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் தங்கியிருந்த அறையில் அவர்களுடைய பையை மர்ம நபர் ஒருவர் திருடிச் சென்றுவிட்டார். அந்தப் பையில் வெளிநாட்டு கரன்ஸியும், மூன்று செல்போன்களும் இருந்தன. இது குறித்து மேற்கிந்திய அணி நிர்வாகம் இலங்கை பொலிஸில் புகார் செய்தது.

பொலிஸார் இது தொடர்பாக தீவிரமாக விசாரித்து வந்தனர். மேலும் அவர்கள் வெளிநாட்டு கரன்ஸி மாற்றும் இடங்களை கண்காணித்து வந்தனர்.

இந்தநிலையில் நேற்று அங்கு வெளிநாட்டு கரன்ஸி மாற்ற வந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்கிந்தியத் தீவு வீரர்களின் திருட்டுப் போன பணம் மற்றும் செல்போன்கள் கைப்பற்றப்பட்டது. விசாரணையில் அவர் இலங்கை ராணுவத்தில் பணி புரிந்தவர் என்று தெரியவந்துள்ளது. அவரது பெயரை வெளியிட பொலிஸார் மறுத்துவிட்டனர்.

# விளையாட்டு

# ஒருநாள் பயிற்சி ஆட்டத்தில் குருநாகல் லெவன் அணியை இந்திய அணி வீழ்த்தியது!



குருநாகல் —

இலங்கை முத்தரப்பு தொடருக்கான பயிற்சிப் போட்டியில் மகேந்திரசிங் டோனி அபாரமாக ஆட, இந்தியா 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குருநாகல் லெவன் அணியை வீழ்த்தியது.

இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவு அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் பயிற்சிப் போட்டி குருநாகல் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மோசமான வானிலை காரணமாக சுமார் ஒரு மணி நேரம் தாமதமாக போட்டி தொடங்கியது. லக்ஷ்மனுக்குப் பதிலாக விக்கெட் காப்பாளர் மகேந்திரசிங் டோனி அணியில் சேர்க்கப்பட்டார். தவிர, கப்டன் ராவிட், கைவ், யுவராஜ் சிங், பதான் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

குருநாகல் அணியில் முபாரக், லங்கா டி சில்வா, துஷாரா, கண்டம்பி ஆகியோர் மட்டுமே சர்வதேச அளவிலான போட்டியில் பங்கேற்ற வீரர்களாக இருந்தனர்.

இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. டோனி, ஷேவாக் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். இந்த ஜோடி விளாசல் ஆட்டம் ஆட, முதல் 5 ஓவரில் 50 ஓட்டங்களை எட்டியது. இந்நிலையில், உதரா வருணவின் பந்தில் ஷேவாக் வெளியேற அணியின் ஓட்டக் குவிப்பும் குறையத் தொடங்கியது.



யுவராஜ் சிங், ராவிட், கைப் ஆகியோர் விரைவில் வெளியேறினர். பொறுப்புடன் ஆடிய டோனி 97 பந்துகளில் 88 ஓட்டங்களைக் குவித்தார். இளம் வீரர்களான சுரேஷ் ரெய்னா 29, வேணுகோபால் ராவ் 13 ஓட்டங்களை மட்டுமே எடுத்தனர்.




கடைசி நான்கு விக்கெட்டுக்கள் மட்டும் 23 ஓட்டங்களில் வீழ்ந்தது.


இறுதியில் இந்திய அணி 42.2 ஓவர்களில் 250 ஓட்டங் களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. குருநாகல் லெவன் அணி உதிரிகளாக 50 ஓட்டங்களைக் கொடுத்தது.

அடுத்து துடுப்பெடுத்தாடிய குருநாகல்அணி, பதானின் வேகத்தில் திணறியது. சகீர்கான், நெஹ்ரா இருவரும் நல்ல ஒத்துழைப்பு கொடுத்தனர். இதன் மூலம் குருநாகல் அணி 36.2 ஓவர்களில் 157 ஓட்டங்களுக்குள் சுருண்டு தோல்வியடைந்தது.

பதான் 20 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். நெஹ்ரா, ஷேவாக், யுவராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# முத்தரப்பு கிரிக்கெட் தொடர் நாளை தம்புள்ளவில் ஆரம்பம்!







கொழும்பு —

முத்தரப்பு கிரிக்கெட் போட்டி நாளை தொடங்கவுள்ளது. முதல் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதவுள்ளன.

இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் இந்தியா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய 3 அணிகள் மோதுகின்றன.

இந்த முத்தரப்பு கிரிக்கெட் போட்டி நாளை தொடங்கி அடுத்த மாதம் 9ஆம் திகதி முடிவடையும். 30ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் இந்தியாவும், இலங்கையும் மோதும். இந்தப் போட்டி தம்புள்ள நகரில் நடைபெறும்.

இந்திய அணிக்கு கப்டனாக ராவிட் உள்ளார். இலங்கை அணியின் கப்டன் அத்தபத்து ஆவார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டனாக சந்தர் போல் இருக்கிறார்.

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் அனைத்து ஆட்டங்களும் பகல் - இரவு ஆட்டங்களாகவே நடைபெறவுள்ளன. இந்தப் போட்டி அட்டவணை வருமாறு -

ஜூலை 30 : இந்தியா - இலங்கை (தப்புள்ள), ஜூலை 31 : இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள), ஓகஸ்ட் 2: இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (தம்புள்ள), ஓகஸ்ட் 3 : இந்தியா - இலங்கை (தம்புள்ள), ஓகஸ்ட் 6 : இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் (கொழும்பு), ஓகஸ்ட் 7: இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் (கொழும்பு), ஓகஸ்ட் 9: இறுதிப் போட்டி (கொழும்பு).

# தங்கம் வென்ற மைக்கல் பெல்ப்ஸ் உலக சாதனையைத் தவறவிட்டார்!







மொன்றியல் —

200 மீற்றர் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றாலும், ஒரு விநாடி தாமதமாக இலக்கை எட்டியதால், உலக சாதனையை நிகழ்த்தமுடியாமல் ஏமாற்றமடைந்தார் அமெரிக்காவைச் சேர்ந்த மைக்கல் பெல்ப்ஸ்.

உலக நீச்சல் சம்பியன் போட்டிகள் கனடாவில் உள்ள மொன்றியல் நகரில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகின்றன.

இதில் ஆண்களுக்கான 200 மீற்றர் நீச்சல் போட்டி செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது.

20 வயதாகும் பெல்ப்ஸ், 1 நிமிடம் 45.20 வினாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பெற்றார்.

ஆனால், 4 ஆண்டுக்கு முன்பு இயன் தோர்ப் நிகழ்த்திய சாதனையை முறியடிக்க நூலிழையில் தவறினார். தோர்ப் 1 நிமிடம் 44.06 வினாடிகளில் 200 மீற்றர் தூரத்தைக் கடந்ததே உலக சாதனையாக உள்ளது.

பெல்ப்ஸுக்கு இது இரண்டாவது தங்கப் பதக்கமாக இந்தப் போட்டியில் அமைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை 100 மீற்றர் தொடர் நீச்சலில் முதல் தங்கத்தை அவர் பெற்றார்.

மொன்றியல் போட்டியில் 8 பிரிவுகளில் பதக்கம் வெல்லும் நம்பிக்கையுடன் வந்திருந்தார். பெல்ப்ஸ்.

ஆனால், 400 மீற்றர் பிரிவில் தகுதிப் போட்டியிலேயே அவர் தோல்வியுற்றார். இதனால் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளானார் பெல்ப்ஸ்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த கிராண்ட் ஹேக்கட் 1 நிமிடம் 46.14 வினாடிகளில் 200 மீற்றர் தூரத்தைக் கடந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

இவருக்கும், பெல்ப்ஸுக்கும் 50 மீற்றர் தூரம் வரை கடும் போட்டி நிலவியது. ஆனால், பெல்ப்ஸ் நூலிழையில் அவரது இரண்டாவது தங்கப் பதக்கக் கனவைத் தகர்த்தார்.

# கிளாசிக் ரெனிஸ் போட்டி; சானியா மிர்சா தோல்வி!





ஸ்டன்போர்ட் —

அமெரிக்காவிலுள்ள ஸ்டன்போர்ட் நகரில் பெண்களுக்கான கிளாசிக் ரெனிஸ் போட்டி நடைபெற்றுவருகிறது.

இதில் சானியா மிர்சா, வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து ஆடிய போட்டியில், வில்லியம்ஸ் 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் சானியாவைத் தோற்கடித்தார்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த

# கடற்தொழில் செய்யும் குடும்பங்களுக்கு தொண்டமானாற்றில் அரச காணிகள்!

வடமராட்சி—

வலிகாமம் வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெயர்ந்து, வடமராட்சி கிழக்கில் தங்கியுள்ள மீனவ குடும்பங்களுக்கு தொண்டமானாறு காற்றாலையடி அரச காணியில் வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து - வடமராட்சி கரையோரப் பகுதிகளில் குடியமர்ந்து தொழில் செய்துவந்த சேந்தாங்குளம், காங்கேசன் துறை, மயிலிட்டி, பலாலி போன்ற இடங்களைச் சேர்ந்த மீனவர்களைத் தொண்டமானாறு காற்றாலையடிப் பகுதியில் குடியமர்த்தி, அந்தப் பகுதிக் கடலில் தொழில்செய்ய வாய்ப்பளிக்குமாறு -

வடமராட்சி வடக்கு, வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இதையடுத்து அண்மையில் வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த யாழ்.அரசாங்க அதிபர் - இடம்பெயர்ந்திருக்கின்ற வலிகாமம் வடக்கு கடற்தொழிலாளர்களின் குடியிருப்பு இடங்களைப் பார்வையிட்ட பின்னர், தொண்டமானாறு காற்றாலையடிப் பகுதியில் வீடுகள் அமைக்கும் திட்டத்தை அறிவித்தார்.

படையினரிடம் தொடர்புகொண்டு அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னர், தொண்டமானாறு காற்றாலையடிப் பகுதியில் 800 வீடுகள் அமைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சைக்கிள் உரிமத் தகடுகள் ஆனைக்கோட்டையில் விநியோகம்

மானிப்பாய்—

வலி.தெற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தின் ஏற்பாட்டில், 2005 ஆம் ஆண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடு இல்லாதவர்களுக்குப் போக்குவரத்துப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வருமானவரிப் பரிசோதகர் எஸ்.ஸ்ரீரங்கன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் மூலம் சைக்கிள் உரிமத்தகடு வழங்கப்பட்டன.

இதன்போது, போக்குவரத்துப் பொலிஸார் சைக்கிள் உரிமத்தகடு பெறவேண்டியதன் அவசியத்தைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூறியதையும் அவதானிக்க முடிந்தது.

ஆனைக்கோட்டை உப அலுவலகம் இந்த மாதத்தில் பல தடவைகள் இவ்வாறான திடீர் பரிசோதனை மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு உரிமத் தகட்டை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (100)

# பல்தரக் கற்பித்தல் தொடர்பான பயிற்சி

நெல்லியடி—

இடைநிலைக் கல்வியை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் பல்லூடக அலகு உள்ள, பாடசாலைகளது ஆசிரியர்களுக்கு பல்தரக் கற்பித்தல் அலகில் பாவிக்கப்படும் உபகரணங்களைப் பயன்படுத்தும் முறை பற்றிய மூன்று நாள் பயிற்சி ஒன்று - நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் விரைவில் நடைபெறவுள்ளது.


இந்தத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து, இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றுவதற்குரிய ஆசிரியர்களைத் தெரிவுசெய்து - எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் -அதிபர்களைக் கோரியுள்ளார். (31)

# இடிந்துவிழும் நிலையில் யமுனா ஏரி; வலயக் கல்விப் பணிமனைக்கும் ஆபத்து!

## புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்—

நல்லூரில் உள்ள 500 வருடங்கள் பழைமை வாய்ந்த யமுனா ஏரி புனரமைக்கப்படாமையால் - யாழ்.வலயக் கல்வி அலுவலகத்துக்குப் பின்புறக் கட்டடம் இடிந்துவிழும் நிலையில் உள்ளதுடன், யமுனா ஏரி அழிவடைந்துவிடும் ஆபத்தும் தோன்றியுள்ளது.



யமுனா ஏரி பரராஜசேகரன் காலத்தில் 'ப' வடிவமாக அமைக்கப்பட்டது. சுமார் 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த ஏரியின் பக்கச் சுவர்கள் - காலநிலையின் தாக்கத்தாலும், மண் அரிப்பாலும் சேதமடைந்து உடைந்து விழுந்துள்ளன.

யாழ்.கல்வி வலய எல்லையைத் தொடும் யமுனா ஏரியின் ஒருபக்கச் சுவர் இடிந்துவிழுந்து, தொடர்ச்சியாக மண் அரிப்பு ஏற்பட்டுவருகிறது. இதன் காரணமாகக் கல்வி வலயக் கட்டடம் உட்பட அயல் காணிகளில் மண் சரிவு ஏற்படும் என்றும் மக்கள் அஞ்சுகின்றனர்.

இதேவேளை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யமுனா ஏரியைப் பாதுகாத்து, அழிந்து போகவிடுவது - பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் அசமந்தப் போக்கைக் காட்டுகிறது. இதைவிட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்படவேண்டும் என்று கல்விமான்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மண்டைதீவு பிரதேசத்தில் நடமாடும் வைத்திய சேவை

நெடுந்தீவு—

மண்டைதீவுப் பிரதேசத்தில் உள்ள மக்களின் நலன்கருதி - மாதத்தில் இரு தடவைகள் தாய் சேய் நல சிகிச்சை நிலையம் மூலம் மருத்துவ சேவைகளை வேலணை பிரதேச வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு நடத்தி வருகிறார்.

கடந்த காலங்களில் மாதம் ஒரு தடவை நடத்தப்பட்டு வந்த இந்த மருத்துவசேவை, தற்போது கடந்த 18 ஆம் திகதி முதல் மாதத்தில் திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் யாழ். மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் நன்மை அடைந்து வருகின்றனர்.

நிரந்தர வைத்தியசாலைக் கட்டடம் கடந்தகால யுத்த அனர்த்தத்தில் முற்றாகச் சேதமடைந்ததால், தற்போது இந்தச் சேவை நிலையம் அங்குள்ள பாலர் பாடசாலை ஒன்றில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# வலித்தூண்டல் அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம்—

வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா - எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும், அதைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவப் பவனியும், ஆசீரும் இடம்பெறும்.

ஆலயத்துக்குச் செல்வதற்காக இளவாலை சேந்தாங்குளம் சந்தியிலிருந்து விசேட பேருந்து சேவை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் அண்மையில் நடத்திய கலைவிழா நிகழ்வில் - கலாமன்ற மாணவிகளின் கிராமிய நடன நிகழ்வை மேலுள்ள படத்திலும், இசை நிகழ்வை மற்றைய படத்திலும் காணலாம்.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## அகவை ஒன்று



பெயர் : த.தனுஷ்
முகவரி : சரசாலை

## அகவை ஐந்து



பெயர் : யூ.அனிஷா
முகவரி : பாஷையூர்

## அகவை ஒன்பது



பெயர் : செ.பிரிந்திக்கா
முகவரி : கரவெட்டி

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................

பெற்றோர் ஒப்பம்

# பயணிகள் படகில் படையினருக்கு பொருட்கள் ஏற்றுவதால் சிரமம்!

நெடுந்தீவு—

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் சேவையிலீடுபடும் பயணிகள் படகில் - நெடுந்தீவில் நிலைகொண்டுள்ள கடற்படை, பொலிஸாருக்கான பொருட்கள் பெருமளவு ஏற்றப்படுவதால் - பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

சீருடையினருக்கான நாளாந்த பாவனைப் பொருட்களையும், மற்றும் இதர பொருட்களையும் பயணிகளுடன், ஆயுதம் தரித்தவர்கள் எடுத்துச் செல்வது தற்போது நாளாந்த செயற்பாடாக மாறியுள்ளது.

இதேவேளை இந்தப் படகு மூலம் சமையற்தேவைக்கான காஸ் சிலிண்டர்களும் பயணிகளுடன் சேர்த்து எடுத்துவரும் செயற்பாடானது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பயணிகளுடன் செல்லும் வாகனங்களில் இவ்வாறாக எரிபொருட்கள் எடுத்துச் செல்வது சட்டவிரோத செயல் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# அறநெறிப் பாடசாலை திறந்துவைப்பு!

பருத்தித்துறை—

பருத்தித்துறை - மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் - மேலைப்புலோலி, தம்பசிட்டி பகுதி சிறார்களின் நலன்கருதி, அறநெறிப் பாடசாலை ஒன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

இந்த ஆரம்ப விழா அண்மையில் சங்கத் தலைவர் சோ. கங்காதரன் தலைமையில் இடம்பெற்றது. (14)

# வைத்தியசாலையில் சிரமதானம்

பருத்தித்துறை—

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட கொடி வாரத்தில், வடமராட்சி பிரதேசத்தின் பல பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலை வளவை சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்தனர். (14)

# 'ஞானச்சுடர்' வெளியீடு

பருத்தித்துறை—

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' இதழின் ஆடி மாத வெளியீட்டு நிகழ்வு - இன்று முற்பகல் 10.30 மணியளவில் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலுக்கான வெளியீட்டுரையை கு.தியாகராஜசர்மாவும், மதிப்பீட்டுரையை யாழ்.இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற பகுதி தலைவர் சி.புண்ணியலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (14)

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

எங்களுடைய சமூகத்தில் பெண்கள் தமது மனப்பரப்பு மீதான வரைகளை தகர்த்துக் கொண்டு வருவது சற்றே அதிகரித்து வருகின்றது என்றபோதிலும், பெண் தன்னைச் சுற்றியுள்ள வட்டங்களை உடைக்கத் தயாராக இருக்கின்ற போதிலும் - தயங்கத்துடனேயே காணப்படுகிறாள்.

'பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடுபாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா'

என்று பாரதி இளந்தலை முறையினருக்கு உற்சாகமூட்டினான். பாப்பா என்பது ஆண் குழந்தை, பெண் குழந்தை இரண்டுக்கும் பொதுவான சொல்.

ஆனால் அநீதிகளைக் கண்டு ஆவேசமுறாமல் இருக்கும் பெண்களும் நமக்கென்ன?




என்று நினைக்கும் பெண்களும் பலர்.

கவிஞர் காசி ஆனந்தன் இவர்களைப் பற்றி நன்றாகவே சொல்கிறார். அடுத்த வீட்டில் எரியும் தீ, தன் சட்டையில் பற்றும் வரை சிந்திக்காதவர்கள் என்று. நமக்கென்ன என்று இருப்பவர்களால் நாட்டுக்கென்ன நன்மை? தவறுகளைத் தட் டிக் கேட்கும் தைரியத்தை ஏன் பெண்களால் வளர்த்துக் கொள்ள முடியவில்லை.

ஒருமுறை பெரிய விழாவொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய ஒருவர்- பெண்கள் பற்றி ஒரு சிறிய பிற்போக்குத்தனமான கருத்தைப் பேசியபோது - ஒரு பெண் அந்தக் கருத்தை ஆதரிக்காமல் வெளிநடப்புச் செய்தார்.

அக்கா செய்யும் தவறை, தங்கை செய்யும் தவறைக் கூடத் தட்டிக் கேட்கப் பயந்து வாழும் சகோதரிகள் இருக்கிறார்கள்.

தவறான வழியில் தங்கை நடக்கிறாள் என்று தெரிந்தும், பேசாமல் இருப்பவர் சிலர்.

ஒரு குடும்பத்தில் - தாய்க்கும் தந்தைக்குமிடையே பிரச்சினை. அந்தத் தாய் தன் கணவனைப் பிரிந்து விட்டார். அவர்களின் குழந்தை - வளர்ந்து பெரியவளாகிறாள். பதினேழு வயதில் - அப்பாவுடன் வாழும் அந்தப் பிள்ளையை குதறிட முயற்சிக்கிறது ஒரு கூட்டம். அவள் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உறவினரிடம் அடைக்கலம் போகிறாள். அங்கும் அவளைத் துரத்தும் இதே பாலியல் வக்கிரம்.

ஐயோ ஏன் எனக்கு இப்படி எனக் கதறி அழும் அவள், தனக்கு இவ்வளவு நேர்ந்தும் வெளியே யாருடனும் பேச விரும்பாமல் பயப்படும் அந்தப் பெண் -

பெற்றோருடையே ஏற்படும் மனக் கசப்புகள், சண்டைகள், பிள்ளைகளின் மனநிலைகளைப் பாதிக்கின்றன என்பதை ஏன் இவர்கள் புரிந்து கொள்வதில்லை.

பெற்றோரின் சச்சரவு நிறைந்த குடும்ப வாழ்க்கைக்குள் அகப்பட்டு, அன்பின்றி அரவணைப்பின்றித் தவிக்கும் பிள்ளை - பின்னாளில் நெறி பிறழ்ந்து - தன் வாழ்வையே சேதமாக்கிவிடுகிறது. பல பெண் குழந்தைகளின் வாழ்வு இப்படிப் போயிருப்பதை கேள்விப்படுகையில், மனம் துடிக்கிறது அனைவருக்கும்.

பல பெற்றோர்கள்தமது பெண் பிள்ளைகள் எங்கே போகிறார்கள், வருகிறார்கள் என்பதைச் சிந்திப்பதில்லை. சில இடங்களில் பெற்றோர் - பெண் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதை பிள்ளைகள் விரும்புவதில்லை என்று கூட பெற்றோர் ஆதங்கப்படுவதைப் பார்க்கிறோம். பிள்ளைகள் மீதான பெற்றோர்களின் அக்கறை என்பது அடக்குமுறை அல்ல. இதையும் பிள்ளைகள் புரிந்து கொள்வேண்டும்.

பத்திரிகைச் செய்திகள் தினமும் ஏதோ ஒரு பாலியல் பலாத்காரத்தை அம்பலப்படுத்துகின்றன. இவற்றில் கூடுதானவை சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களே. இப்படியான தவறுகளுக்கான சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை ஆராய்வது சமூகப் பொறுப்புள்ளவர்களின் கடமையாகிறது.

பிள்ளைகளுக்கு நல்ல நெறிகளைக் காட்டிவிடுவதில் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும். சில உதாரணங்கள் மூலம், சிலவிடயங்களைப் புரியவைக்கலாம். வெளியுலகம் தெரியவிடாது - குறிப்பாகப் பெண்பிள்ளைகளைப் பொத்திவைத்திருத்தல் என்பது ஆரோக்கியமான சமூகத்துக்கு உதவாது.

இன்றைக்குப் பிள்ளைகளை ஈர்க்கக் கூடிய எத்தனை தொடர்பு சாதனங்கள். அவையெல்லாம் எவற்றைப் பற்றி இவர்களைச் சிந்திக்க வைக்கின்றன? ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவி ஒருத்தி தன் புத்தகத்துக்குள் மறைத்து வைத்திருந்த இளம் நடிகர் ஒருவரின் படத்தை எனக்கு ஆவலுடன் காட்டினாள். உங்களுக்கு ஏன் இவனின் படம் என்று கேட்டேன். எனக் குச் சரியான விருப்பம் என்றாள். ஏன் அப்படி விருப்பம் ? என்றேன். விடாமல்.

இவருக்குச் சின்னப்பிள்ளையள் என்றால் சரியான விருப்பமாம். என்னைப் போல கனபிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமானெல்லாம் குடுத்தவராம் என்றாள். நான் பிறகு விசாரித்ததிலே, இவளது தந்தை அரபு நாடொன்றில் வாகன சாரதியாயிருப்பதாக அறிந்தேன்.

உண்மையில் தந்தையின் அரவணைப்பின்மை, இந்தக் குழந்தையை தந்தையைப் போன்ற இன்னொருவர் மீது அன்பு வைக்கத் தூண்டுகிறது. எனவே சந்தர்ப்பமும், சூழ்நிலையும் எங்கே இருக்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

# வாழ்க்கை என்பது ஒரு முறைதான் அது வாழ்வதற்கே!

கடந்து சென்ற சில தசாப்தங்களுக்கு முன் - காதல் ஒரு புனிதமான வார்த்தை மட்டுமல்ல. உண்மையான, நம்பிக்கையான ஒரு உறவைத் தெரிவு செய்வதற்கான அழகானதொரு பாதை.

ஆனால் இன்று காதல் என்ற வார்த்தையே கேலிக்குரியதாகிவிட்டது. நேற்றுப் பார்த்து; இன்று பழகி; நாளை பிரிந்து போகிறது



இன்றைய காதல். இதற்குக் காரணம் ஒன்று - தன்னையிழத்தல். இன்னொன்று - தன்னம்பிக்கை இழத்தல்.

பெண்களைப் பொறுத்தவரை, அதுவும் குறிப்பாக தமிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை காதல் ஒரு புனிதமான உறவு.

காதல் சுமையானதல்ல. சோகமானதோ... விரும்பத்தகாததோ அல்ல. வாசம் நிறைந்ததொரு மலர்வனம். அதை இனிமையானதாகக் கொண்டு செல்வதற்குப் பெண்களால் மட்டுமே முடியும்.

ஒருவனை உங்கள் காதலனாக ஏற்றுக் கொள்ளும்போது, அவன் நாளை உங்கள் கணவன் என்ற உறுதியுடன்தான் ஏற்றுக் கொள் கிறீர்கள். அந்த உறுதியிலிருந்து ஒரு போதும் புரழக்கூடாது. எது நடந்தாலும், என்ன நிகழ்ந்தாலும் அதை எதிர் கொள்ளுங்கள்.

ஒருவனைக் காதலித்து, அவன்தான் எனக்குக் கணவனாக வரவேண்டும் என்று முடிவெடுத்து விட்டபிறகு, மற்றதையெல்லாம் மறந்துவிடுங்கள். உங்களுக்கான பாதையை நீங்கள் சரியான முறையில் தேர்ந்தெடுத்தீர்கள் என்ற நம்பிக்கையோடு அதில் பயணம் செய்ய வேண்டும்.

காதலன் ஒரு முறை தவறு செய்துவிட்டால் - நான் நம்பிக்கை வைத்திருந்தவன் நம்பிக்கைக்கு துரோகம் செய்துவிட்டானே, என்மீது பாசமாயிருப்பதுபோல நடித்து, என்னை ஏமாற்றிவிட்டானே என்று புலம்பிக் கொண்டிருக்காதீர்கள். இனி அவன் எனக்கு வேண்டாம் என்று ஒதுக்கிவிடாதீர்கள். அது சரியான முடிவுமல்ல.

சமூகம் அதைத் தப்பாகத்தான் எடைபோடும். உங்கள் முன்னிலையில் நல்லவிதமாகப் பேசினாலும் - நீங்கள் இல்லாதவிடத்து அவளுக்கு அவனைவிட வசதியானதொருவன் கிடைத்துவிட்டான் போலிருக்கிறது. அதுதான் அவள் அவனைக் கைவிட்டுவிட்டாள் என சமூகம் நோக்கும்.

அதனால் பாதிக்கப்படப்போவது உங்கள் வாழ்க்கையே. இன்று உங்கள் காதலை வெறுக்கலாம். ஆனால் நாளை இன்னொருவனுக்கு மனைவியாகும் போது, உங்கள் அடி மனதில் காதலனின் நினைவுகள் ஆழப்பதிந்திருக்கும். அதை யாராலும் அகற்றமுடியாது. முதல் காதலையும், முதல் முத்தத்தையும் மறக்க முடியாது. அது நிஜம்.

அவனுடைய நடத்தை தவறானது. அதனால் தான் பிரிந்தேன் என்று நீங்கள் ஆயிரம் முறை உரத்துக்கூறும் வார்த்தையை விட, அவள் தவறானவள் என ஒரு ஆண் சொல்லும் வார்த்தைக்கு வலிமையுண்டு. ஆனால் உண்மையாக நேசிப்பதாக இருந்தால், அதை எந்த ஆணும் எடுத்து கூறமாட்டான்.

(தொடரும்...)



# சிநேகிதியே

## புலம் பெயர்ந்த வாழ்வில் கணவன் - மனைவி!

(சென்றவாரத் தொடர்ச்சி...)

தம்பதியர் தமக்கு என்று ஒரு தனிநேரம் ஒதுக்க வேண்டும். வீட்டிலிருக்கும் வேளைகளில் வாரத்தில் மூன்று மணிநேரமாவது கணவன் - மனைவி இருவரும் தனிமையில்





இருக்க நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

தமது பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள் போன்றவர்களுடன் கதைத்துப் பேசி, மகிழ்ந்திருப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. அதே நேரத்தில் கணவன் தனது மனைவியுடன் ஒரு நாளைக்கு சில நிமிட நேரமாவது மனம் விட்டுப்பேசி மகிழ்ந்திருக்க வேண்டும். அப்போது தான் ஒரு பெண் தனது கணவனின் அன்பில் திளைக்கமுடியும். எத்தனைபேர் இதைப் பற்றியெல்லாம் யோசிக்கிறார்கள்.

பிரச்சினைகள் முற்றி, பிரிவு ஏற்பட்ட பின்னர் பெண்ணின் மீது பழியைப் போடுவதால் எதுவும் வந்துவிடப் போவதில்லை. நிம்மதியை இழந்து தவிப்பதுதான் மிச்சம்.

மன அழுத்தமற்ற வாழ்வு ஏற்பட, கணவன் - மனைவி இருவரும் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, தம்மிடையே மகிழ்ச்சி ஏற்படக் கூடிய நிகழ்வுகளைச் செய்ய வேண்டும். முரண்பட்ட வேலைகளைக் கூடியவரை குறைக்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் நல்ல நண்பி ஒருத்தியிருக்க வேண்டும். அல்லது நல்ல குடும்ப நண்பர்கள் இருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளோடு எங்கள் பிள்ளைகளை விளையாட விடப்போகிறேன் என்று உரிமையோடு கேட்கும் அளவுக்கு இருக்கிற நல்ல குடும்ப நண்பர்கள், உறவினர்கள் இருக்க வேண்டும்.

# சுனாமி - ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(17ஆம் அத்தியாயம்)

"அண்ணா!... அண்ணா!..."

தங்கை என்னை உலுப்பி எழுப்பினாள்...! நான் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தேன்.

"அண்ணா!... நல்லா விடிஞ்சுபோச்சு! எழும்புங்கோ..."

எனக்கு இப்போதுதான் நான் இருக்குமிடம் விளங்கியது. சட்டென்று மேரி ரீச்சரின் நினைவு வந்தது. எழும்பினேன்...

"அண்ணா!... அதோ! சிஸ்ரர் வாறா!"

நான் திரும்பிப் பார்த்தேன். வெண்ணிற ஆடையில் தேவதைபோல வரும் சிஸ்ரரின் தோற்றம் என்னை பிரமிக்கவைத்தது. இரண்டுபேரும் எழும்பிநின்று வணக்கம் சொன்னோம்.

"இரவு நல்லாத் தூங்கினீர்களா?"

சிஸ்ரரின் குரல் என் காதில் அம்மாவின் குரல் போலக் கேட்டது. மனம் கசிந்தது. கண்ணில் கண்ணீர் எட்டிப்பார்த்தது. சிஸ்ரர் என் தலையில் கையைவைத்து

"கர்த்தர் உங்களை என்றும் காப்பாற்றுவார். அவருடைய ஆசீர்வாதம் என்றும் உங்களுடன் இருப்பதாக!..."

அந்த மென்மையான இனியகுரல்!... என் காதில் வந்து விழுந்தபோது... என் உள்ளம் உருகியது. கைகள் தாமாகவே குவிய!... மெல்லிய குரலில்...

"வணக்கம்!... சிஸ்ரர்!" என்று வாய் முனகியது.

"வாருங்கள்! பிள்ளைகள்!... முகம் கழுவிப்போட்டு காலை உணவு அருந்தலாம்!..."

நாங்கள் ஒன்றும் பேசாமல் சிஸ்ரரைப் பின் தொடர்ந்தோம். போகும் வழியில் பூத்துநின்ற வாடா மலர்கள் எங்களைப்பார்த்து வரவேற்புச் சிரிப்புச் சிரித்தன. தங்கை என் கைகளைக் கிள்ளினாள்.

"என்ன வேணுமடி!"

மெல்லிய குரலில் முன்னே நடந்து செல்லும் சிஸ்ரருக்குக் கேளாவண்ணம் தங்கையைக் கேட்டேன்!

"அண்ணா! வாடாமல்லிப்பூ நல்ல... வடிவாயிருக்கு. எங்கட வீட்டையும் கொண்டுபோய் நாட்டுவமோ?"

தங்கையின் நிலையை எண்ணி மனதுக்குள் சிரித்தேன். எங்கட வீடு... இப்ப நாங்கள்... அங்கை எப்படிப் போவது? மேரி ரீச்சரின் மரணம்!... அவவுக்கு யாருமில்லை!... அவவின் உடல் மலையில்... கிறிஸ்தவ மதகுருவிடம் வைத்தியவிடுதியில் ஒப்படைக்கப்பட்ட போது. அவர் அழுதுகொண்டு எங்களையும் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இங்கே வந்தார். வாகனத்தில் இரவில் நீண்டதூரப் பயணம். நாங்களிருவரும் தூங்கிவிட்டோம். காலையில் மதகுரு எங்களை எழுப்பிய போதுதான் கண்விழித்தோம். அது ஒரு பெரிய தென் னந்தோட்டம்! நடுவே பெரிய ஆலயம்!... எனக்கு... எதுவுமே விளங்கவில்லை! ஒரு வெண்ணிற ஆடையணிந்த தேவதை வந்து, என் கையைப் பற்றியது! எனக்கு அம்மாவின் நினைவு வந்தது!

"அம்மா... உன்னைவிட்டு நாங்கள் வெகு தூரம் வந்துவிட்டோம்!"

கண்களில் கண்ணீர் கரைதட்டியது. தேவதை எங்களை ஒரு அறைக்குள் கூட்டிச் சென்றது! முகம் கழுவவைத்தது! தேநீரும், பிஸ்கற்றும் தந்தது!

"அண்ணா!... மேரி ரீச்சர்!..."

தங்கை விம்மினாள்! நானும் சேர்ந்து அழுதேன்! தேவதை எங்களை ஆதரவுடன் அணைத்துக்கொண்டது. தேநீரை எடுத்துத் தந்தது. வாங்கிக் குடித்தோம்.

மேரி ரீச்சரின் உடல் வைக்கப்பட்ட பெட்டி குழியில் இறக்கப்பட்டபோது, எல்லோரும் அழுதார்கள். எங்களைப்போல நிறையப் பிள்ளைகள்!கண்களில் நீர்வடிய விம்மியபடி நின்றார்கள். எல்லோரும் குழியில் பிடிமண் இட்டார்கள். நானும் இட்டேன்...!

"மேரி ரீச்சர்... எங்களை அம்மாவிடம் கூட்டிச்செல்ல வந்த நீங்கள் இப்போது... எங்களை... விட்டிட்டு..."

நான் அழுதேன்! தங்கையும் அழுதாள்...! எல்லாப் பிள்ளைகளும் அழுதார்கள்! அன்றிரவு எங்களுக்குப் பசியில்லை. அப்படியே படுத்துவிட்டோம்!

"தம்பி!... சாப்பிடுங்கோ!" சிஸ்ரரின் குரல் கேட்டது. என் நினைவு கலைந்தது. நிமிர்ந்து பார்த்தேன்! நேரே சுவரில் மேரி ரீச்சரின் படம்! என்னைப் பார்த்து மேரி ரீச்சர் சிரித்துக்கொண்டிருந்தா! அவவை மனத்தால் வணங்கினேன்!

ரீச்சர் பஸ்ஸில்... தோடம்பழ இனிப்புத் தந்து... சொன்னது இப்போது மனத்திரையில் பளிச்சிட்டது!

"பிள்ளையள் நாங்கள் ஆண்டவர் தாறதை மகிழ்ச்சியோட ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் எங்களைக் காப்பாற்றுவார்!"

இதுபோலவே எங்கட அம்மாவும் சொல்லுவாள்!

"கடவுள் எங்களுக்கு எல்லாம் தருவார். அவர் எங்களைக் காப்பாற்றுவார்."

இரண்டுபேரும் சொன்னதை நான் இப்ப உணர்ந்தேன்! கோப்பையில் இருந்த உணவு கடவுள் தந்தது. எங்கட பசியறிந்து சிஸ்ரர் மூலமாகத் தந்திருக்கிறார். தங்கையைத் திரும்பிப் பார்த்தேன். அவள் மளமளவென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். நானும் மனதைத் திடப் படுத்திக்கொண்டு சாப்பிடத்தொடங்கினேன். என்றாலும் என் மனதில் ஒரு மூலையில் அம்மாவின் நினைவு எட்டிப்பார்த்தது.



சாப்பிட்டுமுடிய, சிஸ்ரர் எங்களைக் கூட்டிக் கொண்டு போக ஆயத்தமாக நின்றா...!

"பிள்ளையள் வாங்கோ...! நான் இந்த இடத்தைச் சுற்றிக் காட்டுறேன்!" அப்போது மேரி ரீச்சர் போல இருந்த சிஸ்ரரை உற்றுப் பார்த்தேன்! சிஸ்ரர் எங்களைத் தன் கைகளில் பற்றிக்கொண்டு நடந்தபோது, எனக்குக் கடவுள்...! அவர் தானே!... என்ற எண்ணம் வந்தது.

எவ்வளவு பெரிய இடம். சாப்பாட்டு மண்டபம், படிப்பு மண்டபம்! வழிபாட்டு மண்டபம்! சமையல் மண்டபம்! நான் வியப்புடன் பார்த்தேன்! எல்லா இடமும் சுத்தமாக, அழகாக இருந்தது. படுக்கை மண்டபம்!... எல்லாருக்கும் படுக்கை விரிப்புடன் தனிக்கட்டில்!... வெளியே வந்தபோது, பிள்ளைகள் பாடசாலைச் சீருடையில் ஆயத்தமாக நின்றார்கள்! முற்றத்தில் நடுவில்... ஒரு சிலை... குழந்தையைக் கையில் தாங்கிய தெய்வம்... நான்... பார்க்க... சிறார்கள் அதைச்சுற்றி வட்டமாக வந்து நின்று... இனிய குரலில் பாடினார்கள்.

தேன் போன்ற இனிய குரல்கள்!... ஒன்றுசேர ஒலித்தபோது, வானுலகில் நிற்பதுபோல இருந்தது. பாடல் முடிய வரிசையாக அவர்கள் நடந்து போன காட்சி! வெள்ளைப்புறாக்கள் தத்திச் செல்வது போல... எனக்கும் ஆசையாக இருந்தது. அவர்கள் போனபிறகு சிஸ்ரருடன் வாசலுக்கு வந்தோம்! பெரிய வாயில், பெரிய கதவு! சிஸ்ரர் அதைத் திறந்தபோது, கடற்காற்று அவசரமாக ஓடிவந்து எங்களைத் தழுவியது...! மலையில் எங்கள் வீட்டின் பின்புறம் பரந்துகிடக்கும் நீலக்கடல்!... இங்கும்... பரவி நின்றது.

தெருவுக்கு வந்தோம்!... முகப்பில் பெயர்ப் பலகை. கவனமாகப் படித்தேன் "கருணை மேரி இல்லம்"... அழகான பெயர். இப்போது வாசற் கதவால் உள்ளே தெரிந்த சிலையைப் பார்த்தேன். எனக்கு நான் இருக்குமிடம் மிகத் தெளிவாகத் தெரிந்தது! இங்கே நான்!... எப் படி?... இருப்பது?

"என்ன தம்பி யோசிக்கிறியள்?"

சிஸ்ரர் கேட்டது தெருவில் போன பஸ்...! அந்த இரைச்சலில் கேட்கவில்லை.

"அண்ணா!... இந்தக் கடல் எங்கட கடல் தானே?"

தங்கை கேட்டது தெளிவாய் கேட்டது. அவள் மலையைப்பற்றி நினைக்கிறாள்!...

"வாங்கோ பிள்ளையள் உள்ளே போவம்!"

சிஸ்ரர் சொல்லிவிட்டு, எங்களை உள்ளே விட்டு வாசற்கதவைச் சாத்திப் பூட்டினா. பெயர்ப்பலகையின் கீழே இருந்த முகவரியை இப்போது நினைவில் கொண்டுவந்தேன்.

"கடற்கரை வீதி...! பருத்தித்துறை!..."

ஓ!... இது வேற இடம்!... மலையில இருந்து எவ்வளவு தூரம்? இருக்கும். தென்னை மரத்தடியில் போடப்பட்டிருந்த கல்லாசனத்தில் சிஸ்ரர் போய் இருந்தா!... எங்களையும் வந்து இருக்கச் சொன்னா! நாங்கள் அவவுக்கு முன்னால இருந்த கல் ஆசனத்தில் போய் இருந்தோம்!

"பிள்ளையள்!... மேரி ரீச்சரை உங்களுக்கு எப்படித் தெரியும்!"

தங்கை முந்திக்கொண்டு சொன்னாள்!

"அவ எங்கட பள்ளிக்கூட ரீச்சர்! என்ர ரீச்சர்!"

அவள் குரலில் ஒரு அழுத்தமும், சோகமும் இழையோடியது. நான் முழு விபரத்தையும் சொல்லிக் கண்ணைத் துடைத்தேன்.

"சிஸ்ரர் அம்மாவைப் பாக்கவேணும்!"

இருவரும் அழுதபடியே வேண்டுகோள் விடுத்தோம்.

"இப்ப மலைக்குப் போக ஏலாது. போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டிருக்கு. அம்மாவின்ர விபரம் அறிஞ்சா - அங்கை உங்களை நானே அனுப்பிவைக்கிறன்!"

சிஸ்ரரின் உறுதியான குரல் எனக்குத் தெம்பு தந்தது. மேரி ரீச்சர் போல சிஸ்ரரின் சங்கிலியும், சிலுவையும்... சில வேளை...

"மேரி ரீச்சரும் எங்கட இல்லப் பிள்ளைதான். உங்களை உங்கட அம்மாவிட்டைச் சேர்க்கப்பாடுபட்டுது. கர்த்தர் அதை அழைச்சுக்கொண்டார்!..."

சிஸ்ரரின் கண்களில் மின்னிய கண்ணீர்த்துளி... எனக்கு வியப்பு! ஏன்?...

"அவ என்னுடைய சொந்தத் தங்கை!... எங்களுக்கு அப்பா, அம்மா, உறவு என்று ஒருத்தரும் இல்லை!... இந்த இல்லம்தான் எல்லாம்!"

சிஸ்ரரின் குரல் தழுதழுத்தது. எங்களுக்கும் மேரி ரீச்சரின் அக்காவில் இரக்கம் வந்தது!...

"எல்லாம் ஆண்டவன் சித்தம்! நாங்கள் எங்கட கடமையைச் செய்யவேணும்!"

சிஸ்ரர் சொல்லிமுடிய வாசற்கதவு மீண்டும் திறந்தது! அங்கே!...

(தொடரும்...)

# தாய்மையின் மகத்துவத்தை அழிக்கும் கருச்சிதைவுச் சட்டம்



ஒரு மனிதனுக்கு எல்லா உரிமைகளிலும் மிக அடிப்படையானது, வாழ்வதற்கான உரிமையாகும். அத்துடன் மிகவும் பலவீனமுள்ள, குரல் கொடுக்க முடியாத, குற்றம் காணும் நிலையிலுள்ள குடும்ப அங்கத்தவர்களின் உரிமையை கருச்சிதைவு சீர்குலைக்கிறது.

கருச்சிதைவானது, மனிதத்தை அவனது/அவளது இருத்தலின் ஆரம்ப நிலையிலேயே கொன்றுவிடுகின்றது. கருச்சிதைவில் கொல்லப்படும் குழந்தை அவனை/அவளை கருத்தரிக்கும் சூழ்நிலையையும், விருத்தியடையும் தரத்தையும், தங்கியிருக்கும் படிநிலையையும், வயதையும் பொருட்படுத்தாத ஒரு முடிவற்ற பெறுமதியுடையதாகும்.

கருத்தரித்தலின் அடிப்படை நிகழ்வின் பின் 'இருத்தலை' நாம் கருதுவோம். எமது வாழ்வானது வளர்ச்சியையும், விருத்தியையும் ஒரு நிலைப்படுத்தும் தொடர்பியலான பொருண்மையாகும். கருத்தரித்தலின் பின் நாம் மனிதனடையும் ஒரு நிலை என்ற ஒன்றில்லை. பிறப்பு, ஒரு நடிப்பு நிகழ்வு. எனினும், அது வளர்ச்சியோடு ஒப்பிடும் போது அற்பமானது. அதிக தாய்மார்கள் தாம் கருத்தரித்திருப்பதாக அறிந்து கொள்வதற்கு முன்பே அதாவது, கருத்தரித்து 18 நாட்களில் புதிய மனிதக் கருவில் இதயத்துடிப்பு ஆரம்பமாகிறது என, ஒலியலை அதிர்வாய்வுத்துறை வெளிப்படுத்தியுள்ளது. நோ உயர்வுகளுக்கு அவசியமான நரம்பாய்வு அமைப்புகள்கூட, கருத்தரித்து முதல்மாத முடிவில் தான் விருத்தியடையத் தொடங்குகிறது.

## கருச்சிதைவும் தாயும்

கருச்சிதைவு அதன் செயன்முறை சட்டரீதியானதோ அல்லது சட்டவிரோதமானதோ என்பதற்கு அப்பால், அது தாயை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கிறது. கருச்சிதைவு சட்டமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் 'பாதுகாப்பானது' என வற்புறுத்திக் கூறப்பட்டுள்ள நாடுகளில் கருச்சிதைவுகள் தாய்மாரைத் தொடர்ச்சியாகக் கொன்று, ஊனப்படுத்தியும் வருகிறது. கருச்சிதைவு, மார்புப்புற்றுநோய், கருச்சிதைவின் பின்விளைவுகள் தொடர்பான அமைப்புகள், வறண்ட நிலைகள் பின்தொடர்ந்து பிறக்கின்ற பிள்ளைகள் வலது குறைந்தவர்களாதல் என்பன பற்றிய ஆதார மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

## கருத்தாய்வு நூல்

கருச்சிதைவுக்கான 'உரிமை' எனக் கூறப்படுவதுடன், சேர்த்து CEDAW சங்கம் விலைமாதர் நிலைக்குள்ளாதலுக்கும் (Prostitution) ஒரு பாற்புணர்ச்சியில் ஈடுபடுதலுக்கும் (Lesbianism) உள்ள 'உரிமை கள்' எனக் கூறப்படுபவற்றையும் இனங்கண்டுள்ளது. தாயாக, இல்லத்தரசியாக அல்லது கண்காணிப்பளராகக் கருதப்படும் ஒரு பெண்ணின் பங்கு, ஒரு நெகிழ்வற்ற உருச்சட்டமாகக் கணிக்கப்படுகிறது. இது ஒழிக்கப்பட வேண்டும். இவர்களுக்குப் பிள்ளைகள் பற்றிய சட்ட உரிமைப் பாலியல் கல்வியறிவு தேவைப்படுகிறது.

அத்துடன் பெற்றோர் அறியாது கருத்தடை மாத்திரைகளையும், அதற்கான வழிகளையும் கொடுப்பதற்கு 'உரிமைகள்' எனக் கூறப்படுபவற்றை இனங்காண வேண்டிய தேவையும் உண்டு. பிள்ளைகளின் கல்விச் சாதனங்களுள் அவர்களது அடிப்படைப் பெண்மைக் கருத்தாய்வுகளைப் புகுத்துவதற்கு பாடசாலை நூல்களை மீள எழுத முயற்சிக்கிறார்கள். பெண்களின் - குறிப்பாக கருத்தரிக்கும் பெண்களின் சட்ட ரீதியான பாதுகாப்பு குறைக்கப்படக் கேட்கிறார்கள். பாரம்பரியக் குடும்பத் தேவைகள் மாற்றப்பட வேண்டும் என்றும் கலாசாரம், மதம் என்பன CEDAWவின் நடைமுறைப்படுத்தலுக்குத் தடையாக இருக்கின்றன என்றும் நம்புகிறார்கள்.

இதுதான் CEDAW மகளிர் உரிமைகளுக்கான மசோதா CEDAWவுக்கு செயலுருக் கொடுக்கவும், CEDAWவால் இனங்காணப்பட்ட உரிமைகளை வலுப்படுத்தவும் முயற்சிக்கிறது. இன்னும் எல்லா நிறுவனங்களும், செயலாற்றுபவர்களும் இத்தகைய உரிமைகளை முன்னேற்ற வேண்டும் என மசோதா கேட்டு நிற்கிறது.

## எதிர்ப்பைத் தெரிவித்தல்

மகளிர் உரிமைகளுக்கான மசோதா சட்டமாக்கப்படுவதற்கு எதிராக, மிகவும் பலம் வாய்ந்த முறையில் நீங்களும் உங்கள் பங்கில்/நிறுவனத்தில்/குழுவிலுள்ள ஒவ்வொருவரும் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய ஒரு முக்கிய உடனடித் தேவையாகும்.

**இலங்கையின் மரணக் கலாசாரத்தை நிறுவனப்படுத்தும், குடும்பங்களை அழிக்கும், திருமணங்களை அர்த்தமற்றதாக்கும், பிள்ளைகளைப் பிறப்புக்கு முன்கூட்டியே கொல்லும் பெண்களின் சுயநலனையும், தாய்த்தன்மையின் மகத்துவத்தையும் அழிக்கும் இந்த சட்டமயமாக்கலைத் தோற்கடிக்கக்கூடிய ஒவ் வொரு முயற்சியையும் மேற்கொள்ளுங்கள்.**

# தேசியமட்ட நாடகப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் முதலிடம்

கிளிநொச்சி—

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றது.

அனைத்துப் பாடசாலைகளும் பங்குபற்றிய இந்தத் தேசிய மட்ட நாடகப் போட்டியில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கு பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் கொழும்பு மருதானை எல்பிஸ்டன் ரவர் மண்டபத்தில் சுற்றாடல் இயற்கை வனவளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு 20 ஆயிரம் ரூபாவுக்குரிய காசோலையும், இரண்டாவது இடத்தைப்பெற்ற யாழ்.இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு 15 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையும், மூன்றாவது இடத்தைப்பெற்ற மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு 10 ஆயிரம் ரூபாவுக்குரிய காசோலையும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## தேசிய எழுச்சிப் பேரவை கலந்துரையாடல்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினரின் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் கற்சிலைமடுவில் நடைபெற்றது.

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சமகால அரசியல் நிலை தொடர்பாகவும், கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் பிரதேச கோட்டத் தேசிய எழுச்சிப்பேரவையினரால் கலந்துரையாடப்பட்டன.

## மன்னார் - இலுப்பைக்கடவையில் நீர்த்தாங்கிக்கான அடிக்கல் நாட்டுவிழா

மன்னார்—

மன்னார் இலுப்பைக்கடவை கிராமத்தில் புதிய நீர்த்தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இலுப்பைக்கடவை, அந்தோனியார்புரம் ஆகிய இடங்களில் வசித்துவரும் மக்கள் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் இந்த கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு குழாய் வழியாக குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கான தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கிராம அபிவிருத்தி சங்க உத்தியோகத்தர் சாந்தகுமார், மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் கேசவன் மற்றும் நீகன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கிலிக்கன் திருச்சபை உபகரணம் வழங்கல்

வடமராட்சி—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு படகுத் தொகுதிகள், துவிச்சக்கர வண்டிகள் திருத்தும் உபகரணங்கள், மேசைகள் போன்றவற்றை இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ்.மறைமாவட்டத்தினர் வழங்கினர்.

வத்திராயன் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு 5 படகுத் தொகுதிகளும், வெற்றிலைக்கேணி பிரதேசத்தில் சைக்கிள் கடைக்காரர்கள் இருவருக்கும் ஆழியவளையில் மூவருக்கும் சைக்கிள் திருத்தும் உபகரணங்களும் தாளையடிப் பிரதேசத்தில்07 மேசைகளும், வெற்றிலைக் கேணியில் 02 மேசைகளும், ஆழியவளையில் 03 மேசைகளும், உடுத்துறைப் பிரதேசத்தில் 03 மேசைகளுமாக மொத்தம் 14 சலவைத் தொழிலாளர்களுக்கு மேசைகளும், அங்கிலிக்கன் திருச்சபை குரு முதல்வர் வழங்கினார்.

அண்மையில் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையில், சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - அங்கிலிக்கன் திருச்சபை ஊழியர்கள், கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என்ப பலர் கலந்து கொண்டனர்.

(21)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மேம்படுத்தும் முகமாக பயிற்சிப்பட்டறை

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற இடைத்தங்கல் குடிமனைகளில் தொண்டு செய்யும் தொண்டர்களுக்கும், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்களுக்கும் சமுதாயத்தை வலுப்படுத்தும் தொனிப் பொருட்களை உள்ளடக்கிய அறிமுகப்பயிற்சிப்பட்டறைகள் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்ற - இந்தப் பயிற்சிப் பட்டறைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் யு.என்.எச்.சி.ஆரும் இணைந்து நடத்தி வருகின்றன.

உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட, எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையோ, பற்றுதலோ இன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு சேவையாற்றுகின்ற தொண்டர்களை உரியமுறையில் பயிற்றுவிக்கும் நோக்கோடு, இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுகிறது.

எமது சமுதாயத்தில் நீண்டகாலமாகப் பிரச்சினைகளுக்குக் காரணியாக விளங்கும் பால்நிலை தொடர்பான கருத்துகள், பால்நிலை தொடர்பான வன்முறை, பெண்களை வலுப்படுத்தல் ஆகியவை பற்றிய தெளிவான கருத்தூட்டலும் பேணத்தகு வாழ்வாதாரப் பிழைப்பு முறைகள் தொடர்பாகவும், தொண்டர்களின் ஆற்றல்களை மேம்படுத்தல், தொடர்பாடல் இலகுபடுத்தல், திறன் என்பன தொடர்பாகவும் இந்தப் பயிற்சிப் பட்டறைகளில் விளக்கமளிக்கப்படுகிறது.

கடந்த 11, 12ஆம் திகதிகளில் செம்பியன்பற்று முகாமிலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் 28 பேருக்கும், தாளையடியில் கடந்த 20, 21ஆம் திகதிகளில் 30 பேருக்கும், கட்டைக்காட்டில் கடந்த 25, 26ஆம் திகதிகளில் 35 பேருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பங்குபற்றிய தொண்டர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து சான்றிதழ்களை வழங்கின.

இந்தப் பயிற்சிப்பட்டறை தொடர்பாக கருத்துத் தெரிவித்த கிராம மக்கள் பெறுமதி வாய்ந்ததும், பயனுடையதுமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டதாகவும், இதன்மூலம் மக்கள் மிகுந்த நன்மை அடைவார்களென்றும் தெரிவித்தனர்.

## துரித காணி செயலணிக் குழுவினால் காணிசம்பந்தமான பிரச்சினைக்குத் தீர்வு

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் செயற்பட்டுவரும் துரித காணிச் செயலணி அலுவலகத்தில், இதுவரை சுமார் 4 ஆயிரம் வரையான காணி தொடர்பான பிரச்சினைகள் கிடைக்கப்பெற்று, அதற்கான தீர்வுகளை வழங்குவதற்கான செயற்பாடுகள், துரிதமாக இடம்பெற்று வருவதாக, கிளிநொச்சி மாவட்ட உதவிக் காணி ஆணையாளர் சீ.சிவசொரூபநாதபிள்ளை தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் செயற்பட்டுவரும் இந்தக் காணிச் செயலணி - மக்களின் காணிப் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்காக கிராமங்கள் தோறும் செல்வது குறிப்பிடத்தக்கது.

காணி அனுமதிப்பத்திரங்கள், அரச காணிகளில் மக்கள் முறைப்படி குடியேறியும் அதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமை, எல்லைப்பிரச்சினைகள், காணி உரிமை மாற்றம் மற்றும் 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சட்டவிரோதமாக மக்கள் குடியிருந்தமை உட்பட, பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் இனங்கண்டு, இதற்கான தீர்வுக்காக இந்தச் செயலணி செயற்பட்டு வருகிறது.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜுலை - 29

1785 : இந்தியாவில் முதன் முதலாக விண்டிஸ் என்பவர் பலூனில் பறந்தார்.

1907 : சிறுவர் காரணர் இயக்கத்தின் முதலாவது முகாம் டார் செட்டில் பூள் என்னும் இடத்தில் பிரௌன்சி தீவில் சேர் ரொபேர்ட் பேடன் பவலால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1921 : பலத்த எதிர்ப்புகளுக்கிடையே ஜேர்மனியில் நாசிக்கட்சியின் தலைவராக ஹிட்லர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* : அமெரிக்கா ஹங்கேரியுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டது.

1944 : பறக்கும் கோட்டை என்ற அமெரிக்காவின் போர் விமானங்கள் மஞ்சூரியாவில் இருந்த ஜப்பானின் எஃகு உற்பத்தி மையமான அன்ஷான் நகரைக் குண்டு வீசித் தாக்கி அழித்தன.

1945 : அமெரிக்கக் கப்பலான யு.எஸ்.எஸ். இண்டியானா போலந்தின் நீர்மூழ்கிக் குண்டால் தாக்கப்பட்டு மூழ்கியது. மூழ்கும் கப்பலில் இருந்து வெளியே குதித்து தத்தளித்த 883 பேர் சுறா மீன்களுக்கு இரையாகினர்.

1948 : 14 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் லண்டனில் ஆரம்பமாகின. இதில் 59 நாடுகளைச் சேர்ந்த 3714 வீரர்களும், 385 வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

1949 : பி.பி.சி வானொலியில் முதன் முறையாக தினமும் வானிலை முன்னறிவிப்பு ஒலிபரப்ப ஆரம்பிக்கப்பட்டது.

1966 : நைஜீரியாவில் இரண்டாவது தடவையாக இராணுவப் புரட்சி நடந்தது. இந்தப் புரட்சியில் ஆரியர் ஜோன்சன் அயனர்ஜி கொல்லப்பட்டார்.

1968 : செயற்கை முறையில் கருத்தடை செய்வதற்கு பாப்பரசர் எதிர்ப்புத் தெரிவித்தார்.

1979 : தமிழ்நாட்டின் தூத்துக்குடிப் பகுதியில் திரையரங்கு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் - 115 பேர் உடல் கருகி இறந்தனர். 150 பேருக்கு மேல் தீக்காயம் ஏற்பட்டது.

1981 : இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸுக்கும் டயானாவுக்கும் திருமணம் நடந்தது. தொலைக்காட்சி மூலம் ஒளி பரப்பப்பட்ட இந்த திருமண நிகழ்ச்சியை 70 கோடி மக்கள் பார்த்தனர்.

1987 : சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைப் பலி கொல்ல இந்திய இராணுவத்துக்கு வகை செய்து கொடுத்த இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வேரோடு அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த இந்த ஒப்பந்தத்தில் ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பமிட்டனர்.

1998 : பத்தாவது சார்க் உச்சிமாநாடு கொழும்பில் ஆரம்பமாகியது.

தொகுப்பு - சந்துரு

## அமெரிக்க வைத்திய குழுவினரால் வவுனியாவில் இலவச மருத்துவ முகாம்

வவுனியா—

அமெரிக்காவிலிருந்து வருகை தந்த 5 பேர் அடங்கிய வைத்திய குழுவினர் - வவுனியா மாவட்டத்தில் கடந்த எட்டு நாட்களாக நடத்திய இலவச வைத்திய முகாமில் 12 ஆயிரம் பேர் பயன் பெற்றனர்.

வவுனியா ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள விடுதியில், நடைபெற்ற இந்த வைத்திய முகாமில் பலதரப்பட்ட நோய்களுக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

யுத்தம் நடைபெற்ற பகுதிகளிலேயே சிகிச்சை முகாம்களை நடத்தியதாக ஏற்பாட்டுக் குழுவின் இணைப்பாளர் பி.என்.சேகர் தெரிவித்தார். வவுனியா மாவட்டம் வடமாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ளதால், பலரும் வந்து சிகிச்சை பெறுவதற்கு வசதியாக, அதனைத் தெரிவுசெய்ததாக அவர் தெரிவித்தார்.

பத்து மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த மருந்துப் பொருட்களுடன் வருகைதந்த இந்த வைத்தியகுழுவினர், மிகுதி மருந்துகளை வவுனியா பொது வைத்தியசாலைக்கும், இலங்கை செஞ்சிலுவைச்சங்க வவுனியா குழுவினருக்கும் அன்பளிப்புச் செய்தனர்.

## வீதி புனரமைப்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி நகரில் இருந்து திருநகருக்குச் செல்லும் வீதி கிரவல் போட்டு, புனரமைப்புச் செய்யப்படுகிறது. ஜெயந்தி நகருக்கு ஊடாக 7 ஆம் வாய்க்கால், சேவியர் கடைச்சந்தி ஆகிய இடங்களுக்குச் செல்லும் இந்த வீதி - கடந்த இருபது வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமை இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் இந்த வீதிப் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்*
*கழகத்துக் காலை புகின்.*

*-திருக்குறள்*

# நமது நோக்கு

## சிந்திக்கவேண்டியவர்கள் சிந்திப்பார்களா?

சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையானது - தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அருகி வரும் சூழலில், போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாக எந்தவொரு அர்த்தமுள்ள நடவடிக்கையையும் எடுக்கும் திராணியோ, விருப்பார்வமோ அற்ற சிங்கள ஆட்சித் தலைமைகளுடன் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் நம்பிக்கையுடன் நகர்வுகள் எதையும் மேற்கொள்வதில் பயனேதுமில்லை என்ற இறுதியும், உறுதியுமான முடிவுக்கு வந்தபின்னர் தமிழ்மக்கள் தமது சமகால நிலைப்பாட்டையும், அது தொடர்பான சர்வதேச சமூகத்துக்கான செய்தியையும் நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடந்து முடிந்த தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டின் இறுதியில் உணர்வுபூர்வமான முறையில் வெளியிட்ட பிரகடனத்தின்மூலம் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

'தமிழ்பேசும் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையையும், சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு, எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம் தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் அவர்களையும், அவர்களின் இறைமைக்கான போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும்' என தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனத்தின் இறுதி வரிகளில் குறிப்பிட்டுள்ள அழுத்தமானதும், சர்வதேச சமூகம் தனது ஆழமான சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதுமான கோரிக்கையில் உள்ள நியாயத்தன்மையை உலகம் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

சமாதான சூழலிலும், போர்நிறுத்தப்பட்டு அமைதி நிலவும் நிலையிலும், நிழல் யுத்தம் ஒன்றைத் தொடர்ந்து மேற்கொண்டுவரும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும், இராஜதந்திர யுத்தமொன்றை பல்வேறு வடிவங்களிலும், முனைப்புக்களிலும் மேற்கொண்டுவரும் அரசும், இந்த நாட்டின் புரையோடிய புற்றுநோயாகிப்போன இனப்பிரச்சினைக்கு அமைதி வழிமூலம் எட்டுவதற்குக் கிடைத்த இறுதி வாய்ப்பையும்கூட சாத்தியமற்றதொன்றாக்கி விட்டுள்ள நெருக்கடியான நிலையிலேயே - தமிழ்மக்கள் தமது எழுச்சிப்பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்த எழுச்சிப் பிரகடனத்தை மீண்டும் போரைத் தொடர்வதற்கான தமிழ்மக்களின் அறைகூவல் என அரச தரப்பு கருதுமேயானால் - அப்படிக் கருதவேண்டியதற்கான புறச்சூழலை அவர்கள் ஏற்கனவே உருவாக்கி வருவதன் எதிரொலியே இதுவாகும்.

மனிதாபிமானப் பணிகளையே, அரசியல் லாபங்களை மனத்தில்கொண்டு அங்கீகரிக்கத் தயங்கும் ஒரு அரசுடன் மனித உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்து எவராலும் ஆக்கபூர்வமான முறையில் பேச்சுக்களைத் தொடர்ந்து மேற்கொள்ளமுடியுமா என்ற கேள்விக்கு, 'இல்லை' என்ற ஒரு பதில்தான் உள்ளது.

அந்தளவுக்கு பேரினவாதவெறி சிங்கள ஆட்சித் தலைமைகளின் அறிவை ஆக்கிரமித்து அவர்களை நியாயபூர்வமாக சிந்திப்பதிலிருந்து தடுத்துள்ளது.

இந்த நிலையில், சமாதானம் குறித்த கனவுகளுடன் காத்திருத்தல் என்பது இனிமேலும் சாத்தியமற்றது என்பதை தமிழ்மக்கள் தீர்க்கமாக உணர்ந்துகொண்ட பின்னர், சர்வதேசம் சமாதான சமூகத்தவர்களிடம் தமது பிரகடனத்தைத் தெரிவிக்கவேண்டிய நிர்ப்பதந்தம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அதாவது தமது தாயக நிலத்தையும், கடற்பரப்பையும் ஆக்கிரமித்து இயல்புவாழ்வையும், சுதந்திரமான இயக்கத்தையும் அச்சுறுத்தலற்ற செயற்பாடுகளையும் தொடரமுடியாது அடக்கிவைத்துள்ள இராணுவம் அந்தப் பகுதிகளை விட்டு முற்றாக வெளியேறவேண்டும் என்பதுடன், தமது நிலத்தில், தமது பலத்தில் நாம் யாருக்கும் குடியல்லோம் என்ற சுதந்திர உணர்வுடன் தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்களாக வாழும் சூழல் உருவாகவேண்டும் என்று தமிழ்மக்கள் கோருவதில் எந்தத் தவறும் கிடையாது.

இந்தப் பிரகடனத்தின் ஊடாக ஒலிக்கும் தமிழ்மக்களின் குரலில் பயங்கரவாதத் தொனி இருப்பதாக அரசு கூறுமேயானால் - அது அரசு பயங்கரவாதத்தின் எதிரொலி என்றுதான் அர்த்தம். அதனைப் புரிந்துகொள்ளவேண்டியவர்கள் சர்வதேச சமூகத்தவரே...!

இலங்கையின் ஆட்சிபீடத்தை மாறிமாறி கைப்பற்றி அதிகாரம் செய்துவரும் பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைகளை எப்படி அணுகினார்கள் என்பது வரலாறு. எப்படி அணுகுகிறார்கள் என்பது சமகால தரிசனம். எப்படி அணுகப்போகிறார்கள் என்பதுதான் எதிர்கால அச்சம்.


ஆகவே, அச்சத்துடனும், அவநம்பிக்கையுடனும் தமிழ்மக்கள் இனிமேலும் அல்லற்பட்டு அடங்கிக் கிடக்கப்போவதில்லை என்ற யதார்த்தத்தை உலகுக்கு உரைக்கவே இந்தப் பிரகடனத்தை ஓங்கி ஒலிக்கச் செய்த மக்களும் போராளர்களும் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க செய்தியையும் வெளியிட்டேயுள்ளார்கள்.

அதாவது 'நியாயம் கேட்கிறோம் நீதியாய் சிந்தியுங்கள' 'அநீதியே தொடருமெனில் அழித்தொழிக்கத் தயங்க மாட்டோம்' என்பதே அதுவாகும்...!

சொல்லவேண்டியதை சொல்லியாகிவிட்டது!

கேட்கவேண்டியவர்கள் சிந்திப்பார்களா?

## நாடும் நடப்பும்




# யாழ். நகர உயர்பாதுகாப்பு வலய வழக்கு;
# விசாரணை நவம்பர் 10 இற்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டிலுள்ள அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயங்களுக்கு எதிராக சட்டத்தரணி பீ.வீ. ஸ்ரீரங்கனின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுமீதான விசாரணையை உயர் நீதிமன்றம் நவம்பர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான விசாரணை, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் உயர்நீதிமன்ற நீதியரசர்களான நிஹால், ஜெயசிங்க, சிராணி திலகவர்த்தன ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது சம்பந்தப்பட்ட இராணுவ உத்தியோகத்தரைச் சந்தித்து, இந்த இராணுவ பாது காப்பு வலயப் பிரதேசத்தில் மனுதாரர் உட்படப் பொதுமக்களை அனுமதிப்பது தொடர்பாகவும், அங்கிருந்து இராணுவத்தினர் வெளியேறிச்செல்வது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்துமாறு பிரதம நீதியரசர் மனுதாரர் தரப்புக்கு உத்தரவிட்டார்.

இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவில், பிரதிவாதிகளாக இராணுவ தளபதி, யாழ்.மாவட்ட இராணுவ தளபதி, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் 1995இல் யாழ்.நகரமையப்பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அமைத்ததாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனுதாரர் உள்ளடங்கலாக பொது மக்களை இந்தப் பிரதேசத்தில் குடியேறவும், அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனுமதிக்குமாறும் இராணுவத்தினரை இந்தப் பிரதேசத்திலிருந்து குறைந்தது 30 மீற்றருக்கு அப்பால் செல்லுமாறும் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுதாரரின் சார்பில் சட்டத்தரணிகளான ஏ.பி.நைல்ஸ், தரோசா சில்வா ஆகியோர் ஆஜராகினர்.

# அடுத்த வருடம் அரசாங்க பாடசாலைகளில் மாணவரை சேர்க்கும் நடைமுறை அறிவிப்பு

கொழும்பு —

அடுத்த வருடம் அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பான விபரங்களை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி - 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஐந்து வயதைப் பூர்த்தி செய்யும் சிறுவர், சிறுவர்களை பாடசாலைகளில் சேர்த்துக் கொண்ட பின்னர் - குறித்த பாடசாலைகளில் வெற்றிடங்கள் காணப்படுமிடத்தில் ஆறு வயதுக்கு மேற்பட்டவர்களை சேர்த்துக்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படும்.

ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

பாடசாலை அமைந்திருக் கின்ற பிரதேசத்தின் பிரதான குடியிருப்பாளர்களின் பிள்ளைகளுக்கு 40 வீத இட ஒதுக்கீடும், பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடும், அதே பாடசாலையில் கல்விபயலும் மாணவர்களின் சகோதரர்களுக்கு 15 சதவீத ஒதுக்கீடும், இடமாற்றம் பெற்று வருகின்ற உத்தியோகத்தர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதான குடியிருப்பாளர் அல்லாத நிரந்தர குடியிருப்பாளர்களின் பிள்ளைகளுக்கு 14 சதவீத ஒதுக்கீடும் வழங்கப்படும்.

இதுதவிர பாடசாலைகளில் இடமாற்றுகின்ற கல்விசார் உத்தியோகத்தர்களின் பிள்ளை களுக்கு 4 சதவீத ஒதுக்கீடும், வெளிநாட்டவர்களின் பிள்ளைகளுக்கு 2 சதவீத ஒதுக்கீடும் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் தாரா டிமெல் தெரிவித்தார்.

## கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களிடையே மோதல்

கொழும்பு —

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக பல மாணவர்கள் காயமடைந்ததுடன், பல்கலைக்கழக சொத்துக்கள் சிலவும் சேதமாக்கப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் சில மாணவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடே இந்தக் குழு மோதலுக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுவதுடன், இந்த மோதலில் காயமடைந்த இரண்டு மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்த மோதல்களில் பெறுமதிமிக்க பல்கலைக்கழகச் சொத்துக்கள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தபால் வாக்களிப்பு விண்ணப்பங்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பமாகியது!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் அச்சிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தேர்தல் ஆணையாளர் அலுவலகம் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப அரச அச்சகம் சுமார் 50 ஆயிரம் விண்ணப்பப்பத்திரங்களை அச்சிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த விண்ணப்பப்பத்திரங் களை அரச அச்சம் நேற்று முன்தினமே அச்சிட்டு, தேர்தல் ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கியுள் ளது.

விண்ணப்பப் பத்திரங்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான காலம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

1981 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவுச் சட்டம் - தபால் மூலம் வாக்களிப்புக்கான விண்ணப்பப்படிவம் என்ற தலைப்பிலேயே இந்த பத்திரங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப்படிவங்கள் தவிர ஜனாதிபதி தெரிவுச் சட்டத்தின் ஆங்கிலப்பிரதிகள் மற்றும் உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்பு அறிக்கை என்பனவும் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.


இவற்றிலும் ஜனாதிபதி தேர்தலுக்கா அல்லது வேறு ஏதேனும் தேர்தலுக்கா என்பன பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்பு அறிக்கை அச்சிடப்படும் போது கடைப்பிடிக்கப்படும் வழமையான முறையே இங்கு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

வழமையாகத் தேர்தல் அறிவிப்பு அறிக்கை வெளியிடப்படும் போதே அதில் எந்தத் தேர்தலுக்கான அறிக்கை என இலட்சினை பொறிக்கப்பட்டு வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

நேர்காணல்... கலாநந்தி

# புதிய தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மக்கள் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் சூரியன்



ஆசிய ஒலிபரப்புக் கூடடுத்தாபன திட்டமிடல்விரிவாக்கல்பிரிவு உதவி பொது முகாமையாளர் - தம்மிக்க தென்னக்கோன்.

**சூரியன் எவ். எம்மின் ஏழாண்டு நிறைவையொட்டி அதன் நிகழ்ச்சி உதவி முகாமையாளர் ஏ.ஆர்.வி. லோஷன் மற்றும் செய்திப் பிரிவின் உதவி முகாமையாளர் நட ராஜா குருபரன் ஆகியோருடனான நேர்காணல்.**

**1.வானொலி உலகில் ஏழாண்டுகளைக் கடந்துவிட்ட சூரியனின் வளர்ச்சி பற்றி..?**

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒரு அங்கமாக 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சூரியன் - ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை வானொலித்துறையில் அடிப்படை மரபுகளை மீறாமல், பல புரட்சிகர மாற்றங்களை செய்துவந்துள்ளது. காலத்திற்கேற்ற புதிய மாற்றங்கள், ரசனை மாற்றங்களுக்கேற்ற புதிய நிகழ்ச்சி வடிவமைப்புகள், ஒலிபரப்பிலும் ஒளியமைப்பிலும் ஒலி குறியிசைகளிலும் புதிய தொழில் நுட்பங்களை நாம் புகுத்தி வந்திருக்கிறோம். இலங்கையில் முதன் முதலாக வருமான ரீதியாக வெற்றிகரமாக இயங்க ஆரம்பித்த தமிழ் தனியார் வானொலி என்ற பெருமை சூரியனுக்கே உண்டு. கொழும்பு, மலையகம் போன்ற பகுதிகளோடு அண்மைக் காலமாக வட - கிழக்கு, தென்னிலங்கை ஆகிய இடங்களிலும் ஒலிபரப்பு விஸ்தரிப்பை மேற்கொண்டுள்ளோம்.



இடமிருந்து வலமாக...
ஜெப்ரி, ஜெபதர்சன்,ரஞ்சன் கிருஷ்ணானந்தன், எம்.பரணீதரன், யுஸ்மைறூக், நடராஜா குருபரன், ஏ.ஆர்.வாமலோஷன், பிரதீப், எஸ்.பரணிதரன்

இளம்துடிப்பான, பல்துறை அறிவு சார்ந்த அறிவிப்பாளர் குழு ஒற்றுமையோடு பணியாற்றி வந்திருப்பது சூரியனின் பெரியபலம். இன்று இலங்கையில் மட்டுமல்லாமல், சர்வதேசரீதியிலும் புகழ்பெற்றிருக்கும் பல ஊடகவியலாளர்கள் சூரியனின் பயிற்சியில் இருந்து வெளிப்பட்டவர்களே! சூரியனின் புதிய அறிவிப்பாளர் அறிமுகங்கள் எப்பொழுதும் சோடை போனதில்லை.

முதற்தர வானொலி என்ற அடைமொழியை உண்மையாக்கும் வகையில், நாகரிக வரம்புகளை மீறாமல், கலாசார எல்லைகளை காவுகொடுக்காமல், அதேவேளையிலே இளைய சமுதாயத்தை கவரும் வகையில் கலகலப்பான நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறோம். எமது செய்தியறிக்கைகள், செய்தி சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் காலை நிகழ்ச்சிகள் ஆகியன அறிவு சார்ந்த வகையாகவும் விழிப்புணர்ச்சி ஊட்டக் கூடியவகையிலும் அமைந்து வருகின்றன. தொடர்ந்து வரும் காலங்களிலும் காலத்துக்கேற்ற மெருகூட்டல்களோடு எமது பணி தொடரும்.

**2.சூரியன் எவ்.எம் வானொலி ஆரமபிக்கப்பட்டதன் நோக்கம் என்ன?**

வியாபார ரீதியான இலாபமீட்டல் அடிப்படை நோக்கமாக இருந்தாலும், இயந்திரத்தனமாகவும் 30 வயதைக்கடந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்காக மட்டுமே இருந்து வந்த ஒலிபரப்பு கலாசாரத்தை இளைஞர்களை மையப்படுத்தி, 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இளைஞர்களுக்கு இல்லாமலிருந்த நல்ல பொழுதுபோக்கு விடயங்களையும் ஆக்கபூர்வமாக வழங்குவதே எமது நோக்கம்!

சூரியன் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கென்று நல்ல பொழுதுபோக்கு அம்சங்கள் ஒலி, ஒளிபரப்பில் இல்லாமலிருந்தது. அதுபோல நடுநிலையான செய்தி ஒலிபரப்பும், தமிழ் ஊடகம் ஒன்றில் இல்லாத குறையையும் சூரியன் சிறப்பாக நிவர்த்தி செய்தது.

**3.சூரியனின் நிகழ்ச்சித் தொடரில் நேயர்களிடையே அமோக வரவேற்பு கிடைத்த குமமாளம் நிகழ்ச்சி மற்றும் அறிவிப்பாளர்கள் பற்றி..**

அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்டு, அதன் கலகலப்பான தன்மை, இரண்டு மணித்தியாலங்களுக்குள் ஏராளமான விடயங்களை உள்ளடக்கியதால், கணிசமானளவு வரவேற்பை எல்லா நேயர்கள் மத்தியிலும் பெற்றுள்ளது. பாடசாலை முடிந்துவரும் மாணவர்களை அதிகளவில் இந்த நிகழ்ச்சி கவரக் காரணம் - இந்த நிகழ்ச்சியின் இடையே வந்து நேயர்களிடம் கேள்வி கேட்டு, பரிசு வழங்கும் சுப்பிரமணி. நிகழ்ச்சி அறிவிப்பாளர்களின் கலகலப்பான உரையாடலும், தேடலும் நிகழ்ச்சியை மேலும் பிரபலப் படுத்தியுள்ளது. அறிவிப்பாளர்கள் கவிதா, பரணி.

சூரியன் அறிவிப்பாளர்கள் அனைவருமே பரந்த பல்துறையாற்றல், குழு ஒற்றுமை, கடின உழைப்பு மற்றும் நேயர்களோடு அன்போடு உரையாடி, அவர்களது மனதை வென்றெ டுக்கக் கூடியவர் கள் அது தான் எமது சூரியன் அணியின் வெற்றியின் ரகசியம்.

**4.சூரியன் எவ்.எம்மின் யாழ்ப்பாணதது நேயர்கள் பற்றி?**


எமது யாழ்ப்பாணத்து நேயர்கள் முன்பு சூரியன் அந்த பகுதியில் தெளிவில்லாமல் இருந்த காலகட்டத்திலும், மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் கேட்டு, தமது அபிப் பிராயங்களை அனுப்பிவந்திருந்தார்கள். இப்போது எவ்.எம் 93 அலைவரிசையில் எங்களது நிகழ்ச்சி தெளிவாக ஒலிபரப்பாவதால், அடிக்கடி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருவதோடு, யாழ்ப்பாணத்தில் அண் மையில் நடை பெற்ற சூரியப் பாய்ச்சல் வீதி நிகழ்ச்சிகளிலும், இணுவிலில் இடம்பெற்ற மாபெரும் மேடை நிகழ்ச்சியிலும் பெரு மளவில் கலந்து கொண்டு வெற்றியாக்கி தந்திருக்கிறார்கள்

**5.சூரியன் எவ்.எம்மின் செய்திப் பிரிவு பற்றி?**

சூரியனின் செய்திப்பிரிவு மிகவும் சிறியது. ஆனால் விடயத்தில் பெரியது. இலங்கையில் தமிழ் வானொலி வரலாற்றில், செய்தித்துறையில் புரட்சியை ஏற்படுத்தியது சூரியனென்றால், எவரும் அதனை மறுக்க முடியாது என்று நம்புகிறேன். மாற்று மொழிகளினூடாக, மொழிபெயர்ப்பாக வந்த செய்தி-பாரம்பரியத்தை தமிழிலேயே செய்திகளாக வழங்கி வரும் பெருமை 1998 ஆம் ஆண்டில் இருந்து சூரியனுக்கே உண்டு என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். சூரியன் செய்தியின் வெற்றிக்கு எமது செய்தியாசிரியர்கள், பிராந்திய செய்தியாளர்கள், எமது தொடர்பாளர்கள் என்பவர்களின் பங்களிப்பே காரணம் என்று கூறினாலும்கூட, எல்லாவற்றுக்கும் அப்பால் எமது முகாமைத்துவம் - ஊடகதாமத்தைப் பேணுவதே பிரதான காரணமாக அமைகிறது. இந்தவகையில் ஆரம்பத்திலிருந்து செய்திப்பிரிவில் கடமையாற்றும் செய்தி ஆசிரியர்களான எம். இந்திரஜித், வி.எஸ்.சிகாமணி ஆகியவர்களின் பங்களிப்பு அளவிட முடியாது.

**6. மூவின மக்களும் வாழும் கொழும்பு நகரிலிருந்து செய்திகளைத் துணிவாக வழங்குவதில் எவ்வகையான உத்திகளைக் கையாளுகிறீர்கள்?**

மூவின மக்களும் வாழுகின்ற கொழும்பை எமது தளமாகக் கொண்டிருந்த போதிலும், செய்திகளை வழங்குவதில் ஊடகதர்மத்தின்பால் செயற்படுகின்றோம். அந்த வகையில் துணிவாக செய்திகளை வழங்குவதற்கு உத்திகளைக் கையாளுவது என்பதை விடவும், பக்கம்சாராது உண்மைத் தகவல்களை வழங்குவதும், நடுநிலை காப்பதுமே எமது துணிவின் அத்திவாரமென எண்ணுகின்றோம்.



சிகாமணி, குருபரன், இந்திரஜித்

**7.சூரியன் எவ்.எம் ஆரம்பிக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு காலப் பகுதயில், வடக்கு - கிழக்கு மக்கள பெரியளவிலான பிரச்சினைகளை எதர்கொண்டிருந்தனர். இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத் திற்குதெரியப்படுத்தும் வகையில் எநதவிதத்தில் சேவை யாற்றினீர்கள்?**

இந்தக் கேள்விக்கான பதிலில் ஒரு அபத்தமும் இருக்கின்றது. ஏனென்றால் வடக்கு - கிழக்கு செய்திகளை விரைவாகவும், உண்மையாகவும் வழங்குவதில் முன் நின்ற நாம் - அதற்காக எம்மில் ஒருவரை பலிகொடுக்க வேண்டி ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற குண்டு வீச்சு தொடர்பான செய்தியை இரவு 8.25 மணியளவில் வழங்கி விட்டு வீடு சென்ற எமது யாழ்ப்பாண செய்தியாளர் மயில் வாகனம் நிமலராஜன் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான செய்தியையும் அன்றிரவே எமது வானொலியில் சொல்லும் துர் பாக்கியத்துக்கு உள்ளானோம். தவிரவும் அவ்வப்போது பல்வேறு தரப்புகளாலும், சில நெருக்கடிகளுக்கும் உள்ளானோம். ஆனாலும் வடக்கு - கிழக்கில் எம்மோடு கடமையாற்றிய எமது பிராந்திய செய்தியாளர்களின் துணிவும், அர்ப்பணிபபும்,ஒத்துழைப்புமே எமது நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் மேலான இடத்தைக் கொண்டிருந்தன.



இடமிருந்து வலமாக...
சங்கீதா பாக்கியராஜா, கவிதா பிரேமானந், கௌரி பாலசிங்கம், சுதாஷினி கிறிஸ்யடோபர், குமுதினி ஜெகநாதன், உஷாநந்தினி தேவராஜா.

**8. இதன்போது எதிர்கொண்ட அரசியல் ரீதியான அழுத்தங்கள்? பிரச்சினைகள் பற்றி?**

யதார்த்த பூர்வமாக இலங்கையில் செயற்பட முனையும் எந்தவொரு ஊடகமும், பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் செயற்பட முடியாது என்பது யாவரும் அறிந்தது. எனினும் உண்மையில் கோடிட்டுக் காட்டக்கூடியவாறு பாரிய பிரச்சினைகளை நேரடியாக நாங்கள் எதிர்கொள்ளவில்லை. மறைமுகமான சில சிக்கல்கள் ஏற்பட்ட போதும், நாம் முன்பு குறிப்பிட்டது போன்று எமது நடுநிலைமையும், பக்கச்சார்பின்மையும் எம்மைக் காக்கும் காவலர்களாகத் தொழிற்பட்டன.

**9. இந்தக் காலப்பகுதியில் யாழ். குடாநாட்டிலிருந்து உடனடியாக சரியானதும், உறுதிப்படுத்தப்பட்டதுமான செய்திகளைப் பெற்றுக்கொள்வதில் இருந்த தொடர்புகள்**

தொலைபேசி வசதிகள் ஏற்பட்டதன் பின், எமது பிராந்திய செய்தியாளர்கள் அவற்றின் ஊடாகச் செய்திகளை வழங்கி வந்தார்கள். அந்தத் தொடர்புகள் இல்லாத காலங்களில் தபாலிலோ அல்லது கொழும்பு வருபவர்கள் மூலமோ செய்திகளை வழங்கி வந்தார்கள். சிலவேளைகளில் இவை காலம் தாழ்த்தி இருந்திருந்தபோதிலும், தென்பகுதிக்கு புதியனதாகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருந்தன.

**10.செய்திப்பிரிவின் மேலதிக வளர்ச்சி நோக்கிய நகர்வு பற்றி**

ஆரம்பத்தில் நான்கு நேர செய்திகளையும் பின்னர் மணித்தியாலச் செய்திகளையும் வழங்கி வந்த நாம் - பின்னர் சூரியப் பார்வைகள் என்ற செய்தித் தொகுப்பு, விமர்சன நிகழ்ச்சியையும் வழங்கிவந்தோம். தற்போது வாரமொருமுறை சனிக்கிழமைகளில் காலை 7மணிமுதல் 10மணிவரை **விழுதுகள** என்ற ஒரு முழுமையான அரசியல், சமூக, பொருளாதாரம் சார்ந்த முக்கிய நிகழ்ச்சியொன்றை வழங்குகின்றோம். குறிப்பாக தமிழ்வானொலி வரலாற்றில் உடனடிச்செய்திகளை களத்திலிருந்தே நேரடியாகத் துணிவுடன் வழங்கி வந்த நாம் - தற்போது உலகரீதியாக நடைபெறும் பிரதான நிகழ்வுகளைக் கூட அங்கிருந்து நேரடியாகப் பெற்று வழங்குகிறோம். எதிர்காலத்தில் இன்னும் பல புதுமைகளைப் புகுத்துவோம் என நம்புகின்றோம்.

**11.இறுதியாக யாழ்.குடாநாட்டில் சூரியன் எவ்.எம் ஒலிபரப்பு சேவையில் சீரின்மை மற்றும் தடங்கல்கள் ஏற்படுகின்றது. இதை காலக்கிரமத்தில் சீர செய்வீர்களா?**

ஆம்! ஆட்சியாளர்களின் நெருக்குதல்களின் மத்தியில் யாழ்ப்பாணத்துக்கு எமது சேவையை விரிவாக்கிய நாம் - அதிநவீன தொழில்நுட்பத்தின் ஊடாகவே சேவையை வழங்கிவருகின்றோம். குறிப்பாக யாழ். குடாநாட்டுக்கு என்று தனிப்பட்ட அலைவரிசையூடாக நாம் சேவையை வழங்கி வருகிறோம். மிகவிரைவில் தரமான, தெளிவான, நுடபமான சேவையை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, இலங்கையின் எப்பாகத்துக்கும் வழங்குவதற்கான முயற்சியில் எமது நிறுவனம் ஈடுபட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# மும்பையில் வரலாறு காணாத மழை

# 500 இற்கும் மேற்பட்ட மக்கள் பலி!

(மும்பாய்)

**இந்தியாவின் வர்த்தக நகரான மும்பையில் வரலாறு காணாத பலத்த மழையால் ஏற்பட்ட வெள் ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் 500 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன் பலர் இடம்பெயர்ந்துள்ளனர். அந்த நகரம் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த நூற்றாண்டுகளில் இந்தியாவில் இவ்வாறானதொரு மழை பெய்யவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.**

இதன்படி நேற்றுக் காலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 99.5 செ.மீற்றர் மழை பெய்துள்ளது.

மழை தொடர்ந்து பெய்து வருவதால் வெள்ள அபாயம் இன்னும் நீங்கவில்லை. ரயில் தண்டவாளத்தின் மேல் 10 அடி உயரத்துக்குத் தண்ணீர் ஓடுவதால் மின்சார ரயில் போக்குவரத்தும் வெளியூர் ரயில் போக்குவரத்தும் இரண்டு நாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அலுவலகங்களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் செல்வோர் என மும்பையில் மின்சார ரயில்களில் நாள்தோறும் 25 லட்சம் பேர் பயணம் செய்வார்கள். வெள்ளப்பெருக்கினால் அவர்கள் வேலைக்குச் செல்லமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றனர்.

வீதிகளில் ஆறுபோல் வெள்ளம் ஓடுகிறது. ஆங்காங்கே வாகனங்கள் பழுதடைந்து நிற்பதால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. நேற்றும் அரச அலுவலகங்களுக்கும்



கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறைவிடப்பட்டுள்ளது.

மோசமான வானிலை காரணமாகவும், விமான ஓடுபாதையில் தண்ணீர் தேங்கி நிற்பதாலும் விமானப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரண்டாவது நாளாக விமானம், ரயில், பஸ் போக்குவரத்து நடைபெறவில்லை. இதனால் மும்பையில் வர்த்தகம் முடங்கிப் போயுள்ளது. இதனால் சுமார் 1000 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

மும்பை மாநிலத்தின் இதர மாவட்டங்களிலும் வெள்ள நிலைமை மிக மோசமாகவுள்ளது.



பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. ரெய்காட் மாவட்டம் ஜீய் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 150 க்கும் மேற்பட்டவர்கள் உயிருடன் புதைந்துவிட்டனர்.

அந்தப் பகுதிக்கு மீட்புக் குழுவினர் செல்ல முடியாதபடி வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதுவரை ஒரு உடலைக்கூட மீட்க முடியவில்லை. இதனால் கடற்படை வீரர்கள் அந்த இடங்களை நோக்கி விரைந்துள்ளனர்.

இதேபோல் சாகி நாகா பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 50 பேர் பலியானார்கள். எனினும் 22 உடல்களே மீட்கப்பட்டன.

நேவி மும்பை பகுதியில் ஏற்பட்ட நிலச் சரிவில் 12 பேர் பலியானார்கள். 18 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் .

இதேபோல் தானேயில் நிலச்சரிவு ஏற்பட்டு 7 பேர் உயிரிழந்தனர்.

மராட்டியத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் 5 ஆயிரம் இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மும்பை நகரில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க ராணுவ



ஹெலிகொப்ரர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிப்படைந்த பகுதிகளில் ஹெலிகொப்ரர்கள் மூலம் உணவுப் பொதிகள் போடப்பட்டு வருகின்றன. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்களை வாகனங்களில் பயணிக்க வேண்டாம் என்றும், வீடுகளில் தங்கியிருக்கு மாறும் முதலமைச்சர் விலாஸ் ராவ் தேஷ் முக் தெரிவித்தார்.

மும்பையில் பெய்த மழை மிகவும் அபூர்வ்மானது. நேற்றுக் காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் நூறாண்டுகளில் இல்லாத வகையில் கடும் மழை பெய்துள்ளது. மும்பையிலும், தானே, ரத்னகிரி ஆகிய மாவட்டங்களிலும் 24 மணிநேரத்தில் 99.5 சென்ரிமீற்றர் மழை பெய்துள்ளது. 12 மணி நேரத் தில் மட்டும் 87.6 சென்ரிமீற்றர் மழை பெய்துள்ளது.

உலகிலேயே அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் இடம் அசாமின் சிரபூஞ்சியாகும். இங்கு 1910 ஆம் ஆண்டு 85 சென்ரிமீற்றர் மழை 24 மணி நேரத்தில் பெய்ததே இது நாள்வரை கூடுதலாக இருந்தது. ஆனால் இதனைத் தற்போது மும்பையில் பெய்துவரும் மழை முறியடித்துள்ளது.



## அவுஸ்ரேலிய வீரர்களின் அசத்தல்



அட... என்ன இது, எல்லைக் கோட்டருகே அவுஸ்ரேலிய 'வீரர்' பாய்ந்து சென்று பந்தைப் பிடிக்கிறார். பின்புறம் ராணுவ வீரர்களும், ஜீப்பும் நிற்கிறது என்கிறீர்களா? தெற்கு ஈராக்கில் உள்ள அல் முதனா நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அவுஸ்ரேலிய, பிரிட்டன் படை வீரர்களுக்குப் போரடித்து விட்டதாம்! இதனால் ஆஷஸ் ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடத்தியிருக்கிறார்கள்... முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 221 ஓட்டங்கள் குவிக்க பின்னர் துடுப்பெடுத்த பிரிட்டிஷ் அணி 102 ஓட்டங்களுக்குள் சுருண்டு தோல்வியடைந்தது. எங்கேயுமே அவுஸ்ரேலிய 'வீரர்களை' அசைக்க முடியாதுபோலும்.

## 25 வருடங்களுக்குப் பிறகு ரஜனி - கமல் இணைந்து நடிக்கும் புதிய படம் 'பொய்'!

25 வருடங்களுக்குப் பின் ரஜினிகாந் - கமலஹாசன் இணைந்து புதிய படத்தில் நடிக்கவுள்ளனர்.

தமிழ்த்திரை உலகின் இரு பெரும் தூண்களைப் போல் இருக்கும் ரஜனிகாந் - கமலஹாசன் ஆகிய இருவரும் கடைசியாக இணைந்து நடித்த படம் தில்லுமுல்லு. அது ரஜனிகாந் - கமலஹாசன் இருவரும் குருவாக மதிக்கும் கே.பாலச்சந்தர் ரைடக்ட் செய்த படம்.

1980 ஆம் ஆண்டு வெளியான அந்தப் படத்தில் ரஜனிகாந் கதாநாயகனாக நகைச்சுவை வேடத்தில் நடித்திருந்தார். படத்தின் உச்சக் கட்டக் காட்சியில் கமலஹாசன் நடித்திருந் தார்.

இந்த நிலையில் இவர்கள் இருவரும் 25 வருடங்களுக்குப் பின் மீண்டும் ஒரு புதிய படத்தில் இணைகிறார்கள்.

இதுவும் அவர்களின் குரு கே.பாலச்சந்தர் டைரக்ட் செய்கின்ற படம்தான். இந்தப் படத்தின் பெயர் பொய். இது நடிகர் பிரகாஷ்ராஜின் சொந்தப் படம் ஆகும்.

பொய் படத்தின் படப்பிடிப்பு இலங்கையில் நடைபெறுகிறது. இந்தப் படத்தில் தெலுங்கு பட கதாநாயகன் உதய்கிரண் கதாநாயகனாக நடிக்கிறார்.

குருவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் ரஜனி - கமல் இருவரும் இந்தப் படத்தில் இணைந்து நடிக்க சம்மதம் தெரி வித்திருக்கிறார்கள்.




## லண்டன் குண்டுவெடிப்பு; 6 தீவிரவாதிகள் கைது!

லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக 6 தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு தீவிரவாதியை பொலிஸார் சுட்டுப் பிடித்தனர்.

லண்டனில் கடந்த 7 ஆம் திகதி நடந்த குண்டு வெடிப்பில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். இதைத் தொடர்ந்து கடந்த 21 ஆம் திகதியும் ரயில் நிலையங்களிலும், பஸ்ஸிலும் குண்டுகள் வைக்கப்பட்டன. அவை வெடிக்காததால், லண்டன் நகர மக்கள் தப்பித்தனர். இந்தச் சம்பவம் லண்டன் மக்களிடம் மிகப்பெரிய அளவில் பீதியை ஏற்படுத்தியது.


இது தொடர்பாக குண்டுவைத்த தீவிரவாதிகளை லண்டன் பொலிஸார் தேடிவந்தனர். இங்கிலாந்தின் மையப் பகுதியில் உள்ள பர்மிங்ஹாம் நகரில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

பொலிஸார் அங்கு வீடு வீடாகச் சோதனை நடத்தினர். இதில் தனித்தனியாக 3 பேர் கைது செய்யப்பட்டனர். பர்மிங்ஹாமில் உள்ள ஹேமில்ஸ் பகுதியில் தங்கியிருந்த 4 ஆவது தீவிரவாதியைப் பிடிக்க முயன்றபோது, அவர் தப்பியோட முயன்றார். அவரைப் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டு கைது செய்தனர்.

இவர் குண்டுவைத்த 4 தீவிரவாதிகளில் ஒருவராவார். இந்த 4 பேரும் லண்டன் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறையில் அடைக்கப்பட்டனர். பர்மிங்ஹாமில் சோதனை நடத்தியபோது ஒரு வீட்டில் வெடி மருந்துகள் அடங்கிய பொதியும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த 4 பேர் தவிர மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நியூகேசில் நகரில் இருந்து லண்டன் செல்லும் ரயிலில் பயணம் செய்தனர். அதே ரயிலில் பயணம் செய்த பொலிஸார் கொடுத்த தகவலின் பேரில் கிராந்தம் ரயில் நிலையத்தில் லிங்கன்னஷர் நகரப் பொலிஸார் இவர்களைக் கைது செய்தனர்.

## அமெரிக்க டிஸ்கவரி ஓடத்தில் இரண்டு துண்டுகள் விழுந்தன!



அமெரிக்க விண்வெளி ஓடமான டிஸ்கவரி கடந்த 26 ஆம் திகதி விண்வெளியில் ஏவப்பட்டது. அதில் 7 விஞ்ஞானிகள் உள்ளனர். விண்வெளியில் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு அடுத்த மாதம் 7 ஆம் திகதி பூமிக்கு இறங்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், டிஸ்கவரி விண்கலம் விண்வெளியில் ஏவப்பட்டபோது சேதம் அடைந்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஓடம் மேலே சென்றபோது அதன் எரிபொருள் தாங்கி மேல் வெப்பத்தைத் தாங்குவதற்காக ஒட்டப்பட்டிருந்த ஓடு உடைந்து கீழே விழுந்துள்ளது. இது 24 அங்குலத்தில் இருந்து 33 அங்குலம் வரை இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதேபோல் இன்னொரு பகுதியில் 6 அங்குல அளவுக்கு ஓடு பெயர்ந்து கீழே விழுந்தது.

இதனால் விண்வெளி ஓடம் தரை இறங்கும்போது ஆபத்து ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. 2003 ஆம் ஆண்டு கொலம்பியா ஓடம் இதேபோன்ற பாதிப்பு ஏற்பட்டுத்தான் விபத்தில் சிக்கியது. அதேமாதிரி நிலைமை டிஸ்கவரி ஓடத்துக்கும் ஏற்பட்டுவிடுமோ என்று விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர்.

ஓடத்தில் எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடிப்பதற்காக 'போராட் கை' மூலம் ஓடத்தில் இருந்தே விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர். இருந்தாலும் சேதம் பற்றி முழுமையாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.


இதற்கிடையே டிஸ்கவரி விண்கலம் நேற்று விண்ணில் ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றது. டிஸ்கவரியின் பயண ஒழுங்கில் - விண்வெளி நிலையத்துக்குச் செல்வதும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருந்தது. ஏனெனில் விண்வெளி நிலையத்துக்குத் தேவையான சில பொருட்களையும் எடுத்துச் சென்றிருந்தது. பயணத் திட்டப்படி நேற்று சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஓடம் சென்றது. ஓடத்தை நிறுத்தி முழுமையாகச் சோதனை நடத்தப்பட்ட பின்னர் சேதம் ஏற்பட்ட இடத்தில் மீண்டும் ஓடுகளை ஒட்டிப் பழுது சரி செய்யப்படும்.

பழுதைச் சரி செய்ய முடியா விட்டால் டிஸ்கவரி ஓடம் கைவிடப்படும். ஓடத்தில் இருக்கும் விஞ்ஞானிகள் அனைவரும் விண்வெளி நிலையத்துக்குச் சென்று அங்கே தங்கியிருப்பார்கள்.

அவர்களை மீட்க வேறு ஒரு விண்கலம் அனுப்பப்படும். இதற்காக அமெரிக்காவின் இன்னொரு விண்வெளி ஓடமான அட்லாண்டிஸ் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதை அனுப்பி மீட்டுவர சில நாட்கள் வரை காத்திருக்கவேண்டியதாயிருக்கும்.

டிஸ்கவரி பழுது சரி செய்யப்பட்டால் மட்டுமே அதைத் தொடர்ந்து இயக்குவார்கள். மற்ற பயணத் திட்டங்கள் கைவிடப்படும் என்று நாசா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே டிஸ்கவரி சுற்றுப் பயணம் முடிந்ததும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அட்



லாண்டிஸ் விண்வெளி ஓடம் விஞ்ஞானிகளை ஏற்றிக்கொண்டு விண்வெளிக்குச் செல்வதாக இருந்தது. ஆனால் இந்தப் பயணம் தள்ளி வைக்கப்படும் என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

விண்வெளி ஓடத்தில் ஏன் இதுபோன்ற சேதம் ஏற்படுகிறது என்பதை முழுமையாகக் கண்டறிந்து அதை எப்படி நீக்கலாம் என்பதைக் கண்டுபிடித்த பிறகே இனி விண்வெளிப் பயணம் இருக்கும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, தற்போது டிஸ்கவரி விண்கலத்தில் உடைவு ஏற்பட்டதைப் போன்றே, கொலம்பிய விண்கலம் புறப்பட்டபோதும் அதன் மூக்குப் பகுதியிலிருந்து பெரிய பாகம் ஒன்று கழன்று விழுந்தது. இதனை நாசா விஞ்ஞானிகள் அப்போது பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இந்த வெடிப்பே பின்னர் ஓடம் வெடித்துச் சிதற காரணமாகிவிட்டது.

இதனையடுத்து விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்கு அமெரிக்கா ஓடமெதனையும் அனுப்பவில்லை. இந்த நிலையில் இரண்டரை ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் இந்த டிஸ்கவரி ஓடமே நாஸாவால் தற்போது அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கொக்கட்டிச்சோலை வர்த்தகர்களுக்கு தற்காப்பு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன!



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை வர்த்தகர்களுக்கான கிராம தற்காப்புப் பயிற்சியை நேற்று முன்தினம் பிற்பகல் கொக்கட்டிச்சோலை பொது விளையாட்டு மைதானத்தில் மக்கள் தொடர்பாடல் பொறுப்பாளர் அரிகரன் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி சாந்தன் ஏற்றி வைத்தார். கிராம மக்களுக்கான தற்காப்பு பயிற்சியின் அவசியம் பற்றி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து வர்த்தகர்களுக்கான பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அரசியல் கோட்டங்களின் மேலாளர் உதயராஜ், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரதன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் 6 வயது சிறுமி மீது இளைஞன் வல்லுறவு முயற்சி!

வவுனியா

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முற்பட்ட 6 வயதுச் சிறுமி வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த சிறுமி தனது வீட்டில் இருந்த வேளை, அங்கு சென்ற 21வயது இளைஞன், சிறுமிக்கு ஆசை வார்த்தை கூறி அருகிலுள்ள பற்றைக்குள் அழைத்துச் சென்று பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட முயற்சித்தார். அந்த வேளை சிறுமியின் அயல் வீட்டு பெண் இந்தச் சம்பவத்தைக் கண்டதையடுத்து இளைஞர் அங்கிருந்து தலைமறைவாகி விட்டார்.

இதனையடுத்து குறித்த சிறுமி வவுனியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)

# முத்தலிப் கொலை சந்தேக நபர்கள் நால்வருக்கும் விளக்கமறியல்!

கொழும்பு

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் நிசாம் முத்தலிப்பின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள நான்கு சந்தேக நபர்களையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் நால்வரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக தற்சமயம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள உமா எனப்படும் ராஜரட்ணம் சரஸ்வதியின் வாக்குமூலத்தைப் பெறுவதற்கு நேற்று நீதிமன்றம் இரகசிய பொலிஸாருக்கு அனுமதி வழங்கியது.

அத்துடன், முதல் சந்தேகநபரான சஞ்சீவவின் வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு அவரின் சட்டத்தரணி விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், குறித்த வாகனத்தை மன்றில் ஆஜராக்குமாறு உத்தரவிட்டது.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக இதுவரை 22 பேரின் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்த இரகசியப் பொலிஸார், இதில் இராணுவ வீரர்கள் மூவர் அடங்குவதாகவும் குறிப்பிட்டனர்.

முத்தலிப் கொலை தொடர்பாக விகவ்ல ஊடகத்தின் சஞ்சீவ, ஏ.கருணாரட்ண, ஆறுமுகம் செந்திலகுமார் எனப்படும் ராஜன் மற்றும் ராஜரட்ணம் சரஸ்வதி எனப்படும் உமா ஆகியோரே பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (01)

# தேசியத் தலைவரின்...

ஓமாற்றப்பட்டு வந்துள்ளனர். பல பேச்சுவார்த்தைகள், அகிம்சைப் போராட்டங்கள் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்கள சக்திகளுக்கு எதிராக போராடி ஆக்கிரமிப்புகளிலிருந்து தாயகம் பிரதேசங்கள் பெருமளவில் மீட்கப்பட்டு இன்று ஒரு வெற்றிகரமான விடுதலைப் போராட்டமாக எமது விடுதலைப் போராட்டம் உள்ளது.

ஆனால், தமிழர்களின் பலத்தால் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்பாடு அமைதி முயற்சிகள் மூன்று ஆண்டு காலமாக தமிழமக்களுக்கு எந்தவித நன்மைகளையும் அளிக்கவில்லை.

இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழ்மக்களாகிய நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும், மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எமது விடுதலைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்ற எமது தீர்மானத்தை எமது தலைவரிடம் கையளிக்கிறோம்.

இதேவேளை, தமிழ்மக்களாகிய நாம் தமிழீழ தேசியத்தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவதிலும் உறுதியாக உழைப்போம் எனவும் தெரிவித்தார்.

ராஜீவ் கொலை வழக்கில்

# ஆயுள் தண்டனை முடிவுற்றும் நளினிக்கு விடுதலை இல்லை!

வேலூர்

ராஜிவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற நளினி, தண்டனைக் காலம் முடிந்து 27 நாட்களான நிலையிலும் விடுதலையாகாமல் தொடர்ந்தும் சிறையிலேயே இருந்துவருகிறார்.

ராஜிவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முருகன், அவரது மனைவி நளினி, சாந்தன், பேரறிவாளன் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் முருகன், அவரது மனைவி, சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு கடந்த 1998 ஜனவரி 28ஆம் திகதி தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றும்படி இவர்கள் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினர். அப்போது நளினி கர்ப்பமாக இருந்ததால், அவருக்கு மட்டும் தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. மற்றவர்களுக்கு இதுவரை தண்டனை குறைக்கப்படவில்லை.

நளினி வேலூர் பெண்கள் சிறையிலும், அவரது கணவன் முருகன் உட்பட மூன்று பேர் வேலூர் ஆண்கள் சிறையிலும் தண்டனை அனுபவித்து வருகின்றனர். கடந்த ஜூன் மாதத்துடன் நளினியின் தண்டனைக் காலமான 14 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. இவரை விடுதலை செய்ய பரிந்துரை செய்து வேலூர் பெண்கள் சிறை அதிகாரிகள், சென்னையில் உள்ள சிறைத்துறை அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.



இதுகுறித்து வேலூர் பெண்கள் சிறை அதிகாரிகளிடம் தெரிவிக்கையில் ஆயுள் தண்டனை என்பது 20 ஆண்டுகள். ஆனால், சிறைச்சாலை நன்னடத்தை விதிகளின்படி 14 ஆண்டுகள் சிறையில் இருந்தாலே, அவர்கள் நடத்தையைப் பொறுத்து விடுதலை செய்ய பரிந்துரை செய்யப்படுவது வழக்கம்.

இந்த வகையில் சிறையில் நளினி இருந்தவரை, அவர் மீது எந்தத் தவறும் நிரூபிக்கப்படவில்லை. எனவே, அவர் தண்டனைக் காலம் கடந்த ஜூன் மாதத்துடன் முடிவடைந்ததால், அவரை விடுதலை செய்யும்படி சென்னை சிறைத்துறை உயரதிகாரிகளுக்கு பரிந்துரைக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதுவரை பதில் வரவில்லையெனத் தெரிவித்தார். இதனால் தொடர்ந்தும் நளினி சிறையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

## போரைத்...

பொங்கி எழுந்தால் பிறந்திடும் தமிழீழம்.

சந்திரிகாவின் சமாதானம் செப்படி வித்தை.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும்.

ஆகிய கோஷங்களை ஓங்கி ஒலித் தவாறு மக்கள் படையணியாக நகர்ந்து சென்றனர்.

கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழன், பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அமுதன், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

## கோதுமை...

அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த கோதுமை மாவில் இரசாயன கலவையொன்று நுகர்வோரின் தேக நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கலந்திருப்பது தெரியவந்துள்ளதாக அரசாங்க இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது.

இதனையடுத்து குறித்த நிறுவனத்தின் களஞ் சியத்தில் இருந்த சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் கிலோக் கிராம் கோதுமை மாவையும் நிறுவனத்தால் வியாபார தலங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள கோதுமை மாவையும் விற்பனையில் இருந்து தடைசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (01)

## ஈ.பி.டி.பி...

செய்துகொண்டிருந்தார்.

ஸ்ரான்லி வீதியில் - வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகில் இவர்கள் நின்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் ஒன்றில் வந்ததாகக் கருதப்படும் இனந்தெரியாத நபர்கள் இருவர் மேற்படி இளைஞனின் தலையின் பின்புறமாக கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

தலையில் சூடுபட்ட மேற்படி இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

## இலங்கைப்...

எடுக்கவில்லை.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாதுகாப்புத்துறை ஒத்துழைப்புக் குறித்த பேச்சுக்களுக்கான நிறுவனக் கட்டமைப்பு ஏதும் செயற்பாட்டில் இல்லை.

எனினும் பாதுகாப்புத்துறை சார்ந்த ஒத்துழைப்புக் குறித்து கருத்துப்பரிமாற்றங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரு நாடுகள் இடையில் இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்திய இராணுவப் பயிற்சி நிறுவனங்களில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

வெள்ளம், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரண உதவி, உயர் இராணுவ அதிகாரிகளின் சுற்றுப்பயணம், கடற்படைக் கப்பல்களின் பயணம், கடற்பகுதிகளில் கூட்டுக் கண்காணிப்புப் போன்ற பிற ஒத்துழைப்பு நடவடிக்கைகளும் இடம் பெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# காதலனுடன் மன்னார் வந்த சென்னை யுவதி கைதானார்!

மன்னார்

மன்னார் இளைஞர் ஒருவரைக் காதல் திருமணம் செய்த சென்னை யுவதி ஒருவர் - சட்டவிரோதமாக இலங்கைக்குள் வந்ததாகக் கூறி மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த யுவதி சென்னைப் பல்கலைக்கழகம் ஒன்றில் இணைந்து கல்வி கற்ற மன்னாரைச் சேர்ந்த இலங்கை இளைஞரைக் காதலித்து, பெற்றோரின் சம்மதமின்றி கடந்த யூன் மாதம் 5 ஆம் திகதி சென்னையில் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் இந்த மாதம் 20 ஆம் திகதி கடல் மார்க்கமாக மன்னாருக்கு வந்துசேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமது மகள் இலங்கைக்கு கடத்திவரப்பட்டிருப்பதாக யுவதியின் பெற்றோர் செய்த முறைப்பாட்டையடுத்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸார் இவர்களைக் கண்டுபிடித்தனர்.

இந்த யுவதியின் வயது 21 என்றும் இளைஞனின் வயது 24 என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களின் திருமணத்தில் எந்தச் சட்டச் சிக்கலும் இல்லை எனத் தெரிவித்த பொலிஸார், இந்தியப் பிரஜையான இளம் பெண் உரிய ஆவணங்கள் எதுவுமின்றி இலங்கைக்குள் பிரவேசித்தது சட்டவிரோதமானது எனத் தெரிவித்தனர். இவர்கள் இருவரும் இன்று மன்னார் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த; உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

கொழும்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த முடிவு கட்சியின் நிறைவேற்று மற்றும் மத்திய குழுக்களினால் ஏகமனதாக எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அடுத்த பொதுத் தேர்தலின் பிரதமர் வேட்பாளராக அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவை கட்சியின் நிறைவேற்றுக்குழு அறிவித்துள்ளது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. (01)

## வட - கிழக்குக்கான...

வாழும் சிங்கள சமாதான நடவடிக்கைகள் காரணமாக நல்ல பலனை அனுபவிக்கின்றனர். ஆனால் யுத்தத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான வட - கிழக்கு மக்களுக்கு அந்த அதிஷ்டம் கிட்டவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பேசிய அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டென்னி கே.டேவிஸ் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகாணும் விடயத்தில் தமிழீழத்துக்கு சுயநிர்ணய உரிமை அளித்தல் என்பது முக்கிய பங்காற்றும் என்று தெரிவித்தார்.

அதேவேளை, இந்த நிகழ்ச்சியில் பேசிய பேராசிரியர் ஓபேர்ஸ்ட், இலங்கையில் அமைக்கப்பட்டிருக்கும் பொதுக்கட்டமைப்பானது அமைதிப்பேச்சுக்களில் முக்கிய பங்கு வகிக்கும். அதனால் இந்த பொதுக்கட்டமைப்பு தோல்வியடைய அனுமதிக்கக்கூடாது. இந்தப் பொதுக்கட்டமைப்பை முழு அளவில் செயற்படுத்த சர்வதேச நாடுகள் முழு ஒத்துழைப்பை அளிக்கவேண்டும் என்றார்.

ஜூலை 15 முதல் ஒகஸ்ட் - 15 வரை என்றும் இல்லாத வகையில் அசத்தலான தள்ளுபடி 25% வரை
இன்றே விரையுங்கள்...
ஓசானிக் இம்பெக்ஸ்
192, பிரதான வீதி, கொழும்பு - 11.
T.P.011 - 2336720, 011 - 2327168

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.